பொது சன நூலகம்
யாழ்ப்பாண பொது நூலகம்

★ விலை ரூபா 1:25

# ஈழநாடு

THE EELANADU.
NATIONAL TAMIL DAILY.

மலர் 26 மாசி 11 ஜூ அங்க 20 இதழ் 12
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 23-2 84

## சர்வகட்சி மகாநாடு:
# மார்ச் 13-ம் திகதி வரை ஒத்திவைப்பு

(கொழும்பு)

சர்வகட்சி மாநாடு மார்ச் மாதம் 13ம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. நேற்று நடைபெற்ற சர்வகட்சி மகாநாட்டில் மகாசங்கத்தின் உயர்பீடத்தைச்சேர்ந்த வண மடிகபன்னசிக மகாநாயக்க தேரோ, அகில இலங்கை முஸ்லிம் லீக்கைச் சேர்ந்த ஜனாப் ஏ. எல்.எம். காசிம், இலங்கை பௌத்த காங்கிரஸைச்சேர்ந்த வணக்கத்துக்குரிய டிபிபக ஜஸஸி தேரோ, விஸ்வஹிந்து பரிஷத்தைச் சேர்ந்த திரு யோகேந்திரா துரைசுவாமி ஆகியோர் கலந்துகொண்டு நான்கு ஆலோசனைகளைச் சமர்ப்பித்தனர்.

நேற்று முன்தினம் நான்கு ஆலோசனைகள் சமர்பிக்கப்பட்டது.

சர்வகட்சி மகாநாட்டில் பரிசீலனை செய்யப்படும் விடயங்கள் வரையறுக்கப்பட்டுள்

[8-ம் பக்கம் பார்க்க]

## ★ சங்கானையில் நடந்த அதே பாணியில்—
# கிண்ணியா மக்கள் வங்கியில்
# ரூ. $1\frac{1}{2}$ கோடி நகைகள் கொள்ளை!

## கடற்படை சீருடையில் 25 இளைஞர்கள் கைவரிசை!!

(நமது திருகோணமலை நிருபர்)

**மூதூர் தொகுதியிலுள்ள கிண்ணியா மக்கள் வங்கியிலும் பயங்கரக் கொள்ளை நடந்துள்ளது! செவ்வாய்க்கிழமை நள்ளிரவு ஒரு கோடி அறுபது லட்சம் ரூபா பெறுமதியான நகைகளும், ஒரு லட்சத்து நாற்பதினாயிரம் ரூபா ரொக்கப் பணமும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன!**

**சங்கானை மக்கள் வங்கிக் கிளையில், ஒரு வாரத்துக்கு முன்னர் நடந்த அதே பாணியில் இந்தக் கொள்ளையும் நடந்துள்ளது!**

கடற்படையினர் அணிவது போன்ற நீலநிற சீருடையில் சுமார் இருபத்தைந்து இளைஞர்கள் இயந்திரத் துப்பாக்கிகள், டைனமைட் போன்ற ஆயுதங்களுடன் வானொன்றில் சென்று இக்கொள்ளையை நடத்தியுள்ளார்கள்!

### நான்கில் ஒன்று உடைப்பு

இந்த வங்கியிலுள்ள நான்கு இரும்புப் பெட்டிகளில் ஒன்று மட்டுமே முற்றாக உடைக்கப்பட்டு, அதிலிருந்த முழு நகைகளும் அப்புறப்படுத்தப்பட்டுள்ளன!

இன்னொரு இடத்திலிருந்த ரொக்கப்பணமும் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

### வான் கடத்தப்பட்டது

திருகோணமலை சிவபுரி என்ற இடத்திலுள்ள பேக்கரிக்குச் சொந்தமான வானையும், அதன் சாரதியையும் செவ்வாய்க்கிழமை இரவு துப்பாக்கி முனையில் பயமுறுத்தி சில இளைஞர்கள் கடத்திச் சென்றுள்ளனர்.

திருகோணமலையிலிருந்து பதின்மூன்று மைல் தூரத்திலுள்ள தம்பலகாமம் வழியாக வானில் மூதூர் சென்றனர் இடைவழியில் சாரதியின் கை, கால்களைக் கட்டிப்போட்டு, வாயில் பிளாஸ்ரர் ஒட்டி இறக்கிவிட்டார்கள்.

மூதூரிலிருந்து ஏழு மைல் தொலைவில் கிண்ணியா மக்கள் வங்கி இருக்கிறது.

கிண்ணியாவில் மக்கள் வங்கிக் கிளை இருக்கும் வீதியில், நள்ளிரவுக்குச் சில நிமிடங்கள் முன்னதாக, சுமார் பத்துப்

(8-ம் பக்கம் பார்க்க)

## அநாதரவானநிலையில் வான் கண்டுபிடிப்பு!

(திருகோணமலை)

கொள்ளைக்குப் பயன்படுத்தப்பட்ட வான் திருகோணமலை-கண்டி வீதியிலுள்ள முள்ளிப்பொத்தானை என்ற இடத்தில் அநாதரவான நிலையில் இருக்கக் கண்டு பிடிக்கப்பட்டது.

திருகோணமலையிலிருந்து இருபதுமைல் தொலைவிலுள்ள இந்த இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட இந்த வானுக்குள் 'காஸ்' சிலிண்டரும், வெல்டிங் யந்திரமும் இருந்தன.

காஸ் சிலிண்டரில் 'சிவபுரி' என்று எழுதப்பட்டிருந்தது.

## அமைச்சர்கள் பிரயாணம் செய்யும் ஹெலிகாப்டர்களில்
# ஆயுதங்களா?
## அமைச்சரவை மறுப்பு

(கொழும்பு)

அமைச்சர்கள் பிரயாணம் செய்வதற்காகத் தருவிக்கப்பட்ட ஹெலிகாப்டர்களில் ஆயுதங்கள் பொருத்தப்பட்டதாக பத்திரிகையொன்றில் வெளிவந்த செய்தியை நேற்று அமைச்சரவை மறுத்துள்ளது.

அமைச்சரவைப் பேச்சாளரும் கல்வி அமைச்சருமான திரு. ரணில் விக்கிரமசிங்கா இத்தகவலை நேற்றுத் தெரிவித்தார்.

(8-ம் பக்கம் பார்க்க)

## ★ யாழ். மாவட்டத்தின் 10 கிளைகளிலுள்ள மக்கள் வங்கி நகைகள்
# கொழும்பு சென்றது!
## விசேட விமானத்தில் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள மக்கள் வங்கிக் கிளைகளிலிருந்து அடகு நகைகள் நேற்று விமானப் படை விமானம் மூலம் கொழும்புக்குக் கொண்டுசெல்லப்பட்டது.

யாழ். மாவட்டத்திலுள்ள 10 மக்கள் வங்கிக் கிளைகளில் இருந்து பெரிய 'டிரங்' பெட்டிகளில் சேகரிக்கப்பட்ட இந்த நகைகள் பலத்த பாதுகாப்புடன் 'டிரக்' வண்டிகளில் விமான நிலையம் கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து விமான மார்க்கமாக கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இந்த நடவடிக்கை காரணமாக யாழ் மாவட்டத்தின் பல பகுதிகளிலும் இராணுவத்தினர் உஷார் நிலையில் இருந்தனர்.

இது குறித்து மக்கள் வங்கி உயர் அதிகாரியுடன் 'ஈழநாடு' நேற்று தொடர்புகொண்டபோது பாதுகாப்பு நலன்

(8-ம் பக்கம் பார்க்க)

### பாராளுமன்றத்தின் 4வது கூட்டத்தொடர்

(கொழும்பு)

பாராளுமன்றத்தின் 4வது கூட்டத்தொடரினை இன்றுகாலை வைபவரீதியாக ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா ஆரம்பித்து வைத்தபின் காலை 10-30 மணிக்கு ஜனாதிபதி பாராளுமன்றத்தில் அரசாங்கத்தின் கொள்கைவிளக்கம் குறித்து உரையாற்றுவார். (வெ)

## அமைச்சர்கள் பாவனைக்கு வந்த
# 'பென்ஸ் கார்களை விற்க நடவடிக்கை

(கொழும்பு)

அமைச்சர்கள் "பென்ஸ்கார்" பாவிப்பதை இயலுமானவரை தவிர்க்கும்படி ஜனாதிபதிசெய்த சிபாரிசை அமைச்சரவை நேற்று அங்கீகரித்தது.

இத்தகவலை அமைச்சரவைப் பேச்சாளரும், கல்வியமைச்சருமான திரு. ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இதனால் இறக்குமதி செய்

(8-ம் பக்கம் பார்க்க)

## கைதடி ஆயுர்வேத வைத்தியக் கல்லூரி
## மார்ச் 20-ல் ஆரம்பம்

[ஏ. வி. மாணிக்கம்]

பலவருடகாலமாக அரசாங்கத்துக்கும், யாழ் பல்கலைக்கழக நிர்வாகத்துக்குமிடையே இழுபறிக்குள்ளாகியிருந்த கைதடி ஆயுர்வேதக் கல்லூரி இப்பொழுது யாழ். பல்கலைக்கழக நிர்வாகத்தின் கைக்கு வந்துள்ளது.

மார்ச் 17ம் திகதி யாழ் பல்கலைக்கழக நிர்வாகம், கைதடி ஆயுர்வேத வைத்தியக் கல்லூரியைச் சம்பிரதாயபூர்வமாகப் பொறுப்பேற்கவுள்ளது.

மார்ச் 20ம் திகதி கொழும்பு பல்கலைக்கழக உள்நாட்டு மருத்துவக் கல்வி நிறுவகத்தில் சித்தவைத்தியப் பிரிவுப் பட்டப் பரீட்சைக்குத் தோற்றுமவிருந்த தமிழ் மாணவர்களுக்கான பரீட்சை கைதடி ஆயுர்வேதக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. ஆறும் பக்கமும் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

7 கோஸ் பவர் லயிற் எஞ்சின், 2கிலோ டைனமோ விற்பனைக்குண்டு நேரில் வரவும். சட்டணம் சுனாபேக்கரி அறிவொளி சனசமூக நிலையம் முன்பாக ஆறுமுகன் மடம், ஆனைக்கோட்டை. 932

பைரஹா பாம் ஒரு நாள் புரொயிலர் குஞ்சுகள் வியாழக்கிழமைகளில் விநியோகிக்கப்படும். கைசெக்ஸ் பிறவுண் ஒரு மாத பேட்டுக் குஞ்சுகள், சேவல் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. N. சற்குணராசா அன்ட் பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில். 909

கோண்டாவில் இ. போ. ச. டிப்போவுக்கு அருகாமையில் வீடு கட்டுவதற்கு உகந்த இரண்டு பரப்புக் காணி உடன் விற்பனைக்கு. தொடர்பு கொள்ளவும். 519, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 893

கழட்டிய பவுண்மார்க் ஓடுகள் 800உம் 6×4 தீராந்திகள் 200 அடி. நல்ல இன செவி ஆடு இரண்டும் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: ம. யோகரத்தினம் 9, மாட்டீன் ஒழுங்கை, யாழ்ப்பாணம். 953

கோண்டாவிலில் பலாலி வீதியிலிருந்து 300யார் தூரத்தில் வீடு கட்டக்கூடிய 11 பரப்புக் காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ளவும். N அருள்சாகரன் சட்டத்தரணி பலாலி வீதி, கோண்டாவில். 954

புத்தம் புதிய நஷனல் கறுப்பு வெள்ளை 20'' டெலிவிஷனும் Headphone Cassette Playerரும் விற்பனைக்குண்டு. யன்ரின் பஸ்தியாம்பிள்ளை 21 வேம்படி ரோட் யாழ் முகவரிக்கு எந்நேரமும் தொடர்பு கொள்ளலாம். 945

கோழி வளர்ப்பவர்களுக்கு எங்களிடம் தரமான அரிசி குறுநலும் தரக்குறைவான அரிசியும் விற்பனைக்கு உண்டு மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். விஜிதா அரிசி ஆலை தாவடி தெற்கு கொக்குவில். 963

முதிரைப் பலகையால் செய்யப்பட்ட கடை அலுமாரிகள், சோகேஸ், கவுண்டர்கள் விற்பனைக்கு உண்டு. இ. எ. ஆனந்தராசா, பிறேமா றேடேஸ், நெல்லியடி, கரவெட்டி. தொலைபேசி: 94, கரவெட்டி. 967

## தேவை

கோழி, மாடு பராமரிப்புக்கு அனுபவமுள்ளவர்களும் வரைப்பின் வேலைக்கும் தேவை சு. பாலேந்திரா 586 கண்டி வீதி, நெடுங்குளம் சந்தி, யாழ்ப்பாணம். 933

## வகுப்புகள்

Scientific Cutting Hairstyle Cake icing Shorteats, Flower Making ஆகியவற்றிற்கு திங்கள், வெள்ளி தவிர்ந்த ஏனைய நாட்களில் வகுப்புக்கள் நடைபெறுகின்றன. ''The Ladies Academy'' இல. 27, 8வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம். (சாமி அன்சோ அருகாமையில் உள்ள ஒழுங்கை முடிவில் உள்ளது.) 795

## தேவை

கடைச்சல் வேலைக்கு (Lathe work) அனுபவமுடையவர்கள் உடன் தேவை. நல்ல வேதனம் வழங்கப்படும். விம்பி கம்பனி, 375 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 961

ரொபி, இனிப்பு வகைகள், புல்டோ செய்வதில் அனுபவம் உள்ளவர்களும் 20 வயதுக்குட்பட்ட பழக விரும்பும் ஆண்கள் தேவை. விக்னேஸ்வரி இன்டஸ்றீஸ், 166/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (விக்னேஸ்வரா அச்சகம்) 965

## சேவை

எமது அருகோவில் வாங்கும் கலர் பிலிம் சுருள்களை எமிமிடம் Processing and Printing செய்து 24 படங்களுக்கு மேல் பெற்றுக்கொண்டால் ஒரு கலர் பிலிம் சுருள் இலவசமாக வழங்கப்படும். Processing ரூபா 30/- P. C. Printing ரூபா 6/50 கொழும்பு அருகோ, யாழ்ப்பாணம். 502

## கமிசனுக்கு

சாவகச்சேரியில் பிரபல்யமான வர்த்தக நிலையம் ஒன்று கமிசனுக்குஉண்டு. கடிதமூலம் தொடர்புகொள்ளவும். விளம்பர இல: 916. மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 916

## வாடகைக்கு

கோண்டாவிலில் சகல வசதிகளும் கொண்ட புதிய மேல் மாடி வீடு வாடகைக்குண்டு. சிறிய குடும்பம் விரும்பத்தக்கது. விளம்பர இல: 923 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 923

## பயிற்சி

உள்ளூரிலும் வெளிநாடுகளிலும் வேலைவாய்ப்புப் பெறுவதற்கேற்ற முறையில் வெல்டிங், வயரிங், மோட்டார் மெக்கானிசம் ஆகிய நெறிகளில் பயிற்சியளிக்கப்பட்டு அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும். The Jaffna Engineering College J. E. C, 63, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 917

## WANTED

Programme - Secretary Jaffna Y. M. C. A. Application Forms available General Secretary closing 28th February 1984 Initial salary around Rs 1000/- 944

## இடமாற்றம்

இல. 168, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடிச் சந்தியடியில் நடைபெற்றுவந்த கடைச்சல், மின் ஒட்டு வேலைகள் தற்பொழுது 375 மணிக்கூட்டுவீதிக்கு [கஸ்தூரியார்வீதிச் சந்திக்கு அருகாமையில்] இடமாற்றப்பட்டுள்ள தென்பதை வாடிக்கைக் காரருக்கு அறியத்தருகிறோம்.

விம்பிகம்பனி

(948)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
இராமநாதன் நுண்கலைக்கழகம்
இசைக்கலைமணி / நாட்டியக் கலைமணிப் பயிற்சிநெறியினைப்

## பயிலுவதற்கான அனுமதி - 1984

மேற்குறித்த கல்விநெறியினைப் பயில அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் 1984 ஏப்ரல் 06ம் திகதிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பப் படிவங்களும் மேலதிக விபரங்களும் 23×10 செ. மீ. அளவினதான உங்கள் முகவரிகொண்ட முத்திரை ஒட்டப்பட்ட கடித மேலுறையை, உதவிப்பதிவாளர், தேர்வுகள் என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக் கொள்ளவும்.

பதிவாளர்

திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
21-02-1984 964

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம்
மாவட்ட நீதிமன்றம்

சுழிபுரத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை இராசையா என்பவரின் மரணசாதனமில்லா மரணச்சொத்துக்களின் விடயத்தில்,

மரணமெய்தியவர் கணபதிப்பிள்ளை இராசையா கைம்பெண் நிர்மலாதேவி, சுழிபுரம்

மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம் } இல ரி/189

எதிர்

1. சந்தையா கணபதிப்பிள்ளை,
2. இராசையா சிவராம், (பராயமற்றவர்)
3. இராசையா சிவநேசன், (பராயமற்றவர்)

பராயமற்ற 2-ம், 3-ம் எதிர் மனுதாரர்கள் தங்கள் வழக்குப் பாதுகாவலர் 1-ம் எதிர் மனுதார் மூலம்.
சுழிபுரம்.

எதிர்மனுதாரர்கள்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்து போனவரின் மரணசாதனமில்லா மரணச்சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் இதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதிப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது. அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1984-ம் ஆண்டு வைகாசி மாதம் 2-ந் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்டுள்ள பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுன கட்டளையாகப் படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1984-ம் ஆண்டு மாசி மாதம் 7-ம் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

நீதிமன்றக்கட்டளைப்படி
ஆழ்வார் சிவபாதசுந்தரம்
பதிவாளர்

என்னால் வரையப்பட்டது
திருமதி வி. ஏரம்பமூர்த்தி
மனுதாரின் பதிவுபெற்ற சட்டத்தரணி 831

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

# யாழ். பல்கலைக் கழகத்தில் பனம்பொருள் ஆராய்ச்சி

[புலோலி]
பனம்பொருள் அபிவிருத்திச் சபை பனம்பொருள், மூலவள ஆராய்ச்சிவேலைகளை யாழ். பல்கலைக்கழக ஆய்வுகூடத்தில் ஆரம்பித்துள்ளது. இவ் ஆராய்ச்சிவேலைகள் விஞ்ஞான ரீதியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஐக்கியநாடுகள் உலக உணவு விவசாய நிறுவனமும் பனம்பொருள் அபிவிருத்திச்சபையும் இணைந்து 1983ம் ஆண்டு பெப்ரவரி மாதம் யாழ்ப்பாணத்தில் நடாத்திய சர்வதேச பனைவளத் தொழிற்பாட்டு மகாநாட்டில் ''நிப்ரூ'' தேசிய பனை அபிவிருத்தி ஆராய்ச்சி நிலையம் ஒன்றை நிறுவுவதென்று முடிவு செய்யப்பட்டது இவ் ஆராய்ச்சி நிலையத்தை உருவாக்குவதற்கு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்ட உலக உணவு விவசாய நிறுவனம் 2,64,800 அமெரிக்க டொலர்களைப்பனம் பொருள் அபிவிருத்திச்சபைக்கு வழங்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

இவ் ஆராய்ச்சி நிலையத்திற்கான பூர்வாங்க நடவடிக்கையாக தற்போது பனம்பொருள் அபிவிருத்திச்சபைத் தலைவர் திரு கே. நடராசாவின் முயற்சியைத் தொடர்ந்து யாழ். பல்கலைக்கழக ஆய்வுகூடத்தில் ஆரம்பகட்ட ஆய்வு வேலைகள் தொடக்கிவைக்கப்பட்டுள்ளன இவ் ஆராய்ச்சிக்கு பேராசிரியர் டாக்டர் மகேஸ்வரன் பொறுப்பாகக் கடமையாற்றி வருகிறார்.

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம்
மாவட்ட நீதிமன்றம்

சுழிபுரத்தைச் சேர்ந்த கந்தசாமி மயில்வாகனம் என்பவரின் மரணசாதனமில்லாத மரணச்சொத்துக்களின் விடயத்தில்.

மரணமெய்தியவர் கந்தசாமி மயில்வாகனம் கைம்பெண் குகனேஸ்வரி, சுழிபுரம்.

மனுதார்

வழ. இல. ரி/185

எதிர்

1 கந்தசாமி குமாரசாமி,
2 மயில்வாகனம் முரளி கிருஷ்ண (பராயமற்றவர்)
3 மயில்வாகனம் கோபி கிருஷ்ண (பராயமற்றவர்)

எல்லோரும் சுழிபுரம்.
எதிர்மனுதாரர்கள்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்து போனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது. அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1984-ம் ஆண்டு சித்திரை மாதம் 4-ந் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்டுள்ள பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுன கட்டளையாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக்கட்டளைப்படி
சுப்பிரமணியம் வேலாயுதம்
பதிவாளர்

1984-ம் ஆண்டு மாசி மாதம் 1-ம் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

என்னால் வரையப்பட்டது
திருமதி வி ஏரம்பமூர்த்தி
மனுதாரின் பதிவுபெற்ற சட்டத்தரணி 830

## புதிய தலைவர்

(கொழும்பு)

கொழும்பு சட்டத்தரணிகள் சங்கத்தின் நடப்பு வருடத் தலைவராக திரு. ரன்பண்டா செனவிரத்ன தெரிவுசெய்யப் பட்டுள்ளார்.

இலங்கையிலேயே மிகப் பெரியதும் பழமைவாய்ந்ததுமான கொழும்பு சட்டத்தரணிகள் சங்கத்திற்கு தலைவராக தெரிவு செய்யப்பட்ட இளம் சட்டத்தரணி திரு. செனவிரத்ன ஆவார்.

மிகிந்தலை தொகுதியிலுள்ள காட்டுப் பகுதியான மறடன்கல என்னும் கிராமத்தைத் தைச் சேர்ந்த திரு செனவிரத்ன அனுராதபுரம் மத்திய பாடசாலை பேராதனை பல்கலைக்கழகம் என்பவற்றின் பழையமாணவர் மத்தியபாடசாலை பழையமாணவர் ஒருவர் தலைவராக தெரிவு செய்யப்

(7-ம் பக்கம் பார்க்க)

## கூலியாட்கள் தேவை

மில்லில் கூலிவேலை செய்ய அனுபவம் உள்ள கூலி ஆட்கள் தேவை. நேரில் வரவும்.

118, ஆஸ்பத்திரி ரேட், யாழ்ப்பாணம்.

(949)

INSTITUTE OF BANKERS

# EXAMINATION

இடைநிலைப் (INTERMEDIATE) பரீட்சைக்கான வகுப்புகள்

ஆரம்பம்: 25—2—84

★ சனி, ஞாயிறு தினங்களில் மட்டுமே வகுப்புகள் நடைபெறும்.

★ இலவச அச்சடித்த பாடக்குறிப்புகள்.

விபரங்களுக்கு: நேரில் / தபாலில்

ASTAN INSTITUTE

166/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

# லெபனானிலிருந்து அமெரிக்கத் துருப்புக்கள் வெளியேறத் தொடங்கின!

## இஸ்ரேலிய விமானங்கள் குண்டுவீச்சுத் தாக்குதல்

பெய்ரூட், பெப். 22 லெபனானிலிருந்து அமெரிக்கத் துருப்புக்கள் வெளியேறத் தொடங்கியுள்ளன.

அமெரிக்க அதிபர் ரேகன் ஏற்கனவே இம்முடிவை எடுத்திருந்த போதிலும் லெபனானிலிருந்து அமெரிக்கத் துருப்புக்கள் நேற்று முதற் தடவையாக வெளியேறத் தொடங்கின. பெய்ரூட்டிலுள்ள அமெரிக்கத் தளத்தில் உள்ள 1300 வீரர்களில் முதலாவது தொகுதியினர் நேற்று ஹெலிகப்டர் மூலம் ஆழ்கடலில் தரித்து நிற்கும் அமெரிக்க விமானந்தாங்கிக் கப்பலுக்கு போய்ச் சேர்ந்தனர்.

1300 வீரர்களும் கப்பலுக்கு ஒரு வாரகாலத்திற்குள் எடுத்துச் செல்லப்பட்டுவிடுவார்கள் என்று அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அமெரிக்க வீரர்கள் அனைவரும் வெளியேறிவிட்டால் லெபனானில் பிரான்ஸ் வீரர்கள் மட்டுமே இருப்பார்கள். ஏற்கனவே இத்தாலி, பிரிட்டிஷ் வீரர்கள் வெளியேறிவிட்டனர்.

இதேவேளை லெபனானில் முஸ்லிம் தீவிரவாதிகளுக்கும் இராணுவத்துக்குமிடையே தொடர்ந்து சண்டை இடம் பெற்று வருகின்றது.

இஸ்ரேலிய விமானங்களும் நேற்று குண்டுவீச்சுத் தாக்குதலை நடத்தின. 10 இஸ்ரேலிய விமானங்கள் குண்டுவீச்சுத் தாக்குதலை நடத்திய அதே வேளையில் ஏராளமான விமானங்கள் அந்த விமானங்களுக்குப் பாதுகாப்பாகச் சென்று கொண்டிருந்தன. (கு)

சமுதாய முரண்பாடுகளுக்கு

## சமாதான முறையிலேயே தீர்வு காணவேண்டும்

(சாவகச்சேரி)

"சமுதாயத்தில் ஏற்படுகின்ற முரண்பாடுகளுக்கான ஆக்கபூர்வமான தீர்வுகளை நிரந்தரமாக ஏற்படுத்த சமுதாய சேவைகளில் ஈடுபடுகின்றவர்கள் சமாதான வழிகளை மேற்கொள்ள வேண்டும். வன்முறைசார்ந்த வழிகளில் எக்காலத்தும் இவ்வாறான தீர்வுகளை ஆக்கபூர்வமாக ஏற்படுத்த முடியாது. கடந்தகால வரலாற்றுச்சம்பவங்கள் எமக்கு இவ்வழிகளில் அனுபவமாகவுள்ளன."

இவ்வாறு சர்வதேசமாதான சேவை இயக்கத்தின் வடபிராந்தியக்கிளையின் தலைவர் திரு. வீ. எஸ். துரைராஜா, அண்மையில் கைதடியில் நடைபெற்ற மேற்படி இயக்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் தலைமைவகித்து உரையாற்றும்போது தெரிவித்தார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில்,

"சர்வதேசசமாதானசேவை இயக்கமானது உலகில் பலநாடுகளில் பல ஆக்கபூர்வமான பணிகளை சமுதாயநலன் கருதி ஆற்றிவருகின்றது. எனவும், இலங்கையிலும் கூட, இவ்வியக்கம் பல்வேறுவகையான செயற்திட்டங்களை உருவாக்கிச்சேவை ஆற்றியுள்ளது. விசேடமாக அண்மைக்காலத்தில் இந்த நாட்டில் ஏற்பட்ட இனக்கலவரத்தின்போது வடபகுதிக்கு வந்தஅகதிகளுக்கென பல்வேறு விதமான உதவிகளையும் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும் என்றும் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும் இருந்து பிரதிநிதிகள் இக்கூட்டத்திற்குச் சமூகமளித்திருந்தனர்.

# பஞ்சாப் வன்முறைகளில் 9 இந்துக்கள் பலி!

## 12 பேர் காயம்

அமிர்தஸரஸ், பெப். 22 பஞ்சாப்மாநிலத்தில் நேற்று இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களில் 9 பேர் பலியானார்கள். 12 பேர் படுகாயமடைந்தனர்.

இந்திய அரசுக்கு பெரும் பிரச்சினையைக் கொடுத்துவரும் பஞ்சாப் மாநிலத்தில் சீக்கியர்களுக்கும் இந்துக்களுக்குமிடையே நேற்று ஆங்காங்கே பலத்த சண்டை இடம்பெற்றது.

அமிர்தஸரஸ் நகரில் இடம்பெற்ற சண்டையில் 9 இந்துக்கள் பலியானதுடன் பலர் பலத்தகாயமடைந்தனர்.

இதேவேளை ஹரியானா மாநிலத்திலும் இவ்வாறான சண்டைகள் நடைபெற்று வருவதைத் தொடர்ந்து அங்கு ஊரடங்குபிறப்பிக்கப்பட்டுள்ளது. ஊரடங்கு சட்டத்தை மீறுபவர்களை சுடுமாறு கண்டிப்பான உத்தரவு படையினருக்கு விடுக்கப்பட்டுள்ளது. (கு)

## வெள்ளப் பாதிப்பு: விபரங்கள் சேகரிப்பு

(புலோலி)

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள குடவத்தை பருத்தித்துறை, வேம்படி, ஆட்டுப்பட்டி மகிழ்துறை, துன்னிச்சம்பாதி, வாய்க்கால் மாயக்கை கிராமங்களில் அண்மையில் பெய்த பெருமழையினாலும் வெள்ளத்தினாலும் பெரும் பாதிப்படைந்த குடும்பங்களுக்கு நிவாரண வசதிகளை மேற்கொள்ளுமுகமாக கிராம சேவை அலுவலர் திரு செ. சி. ஞானச்சந்திரன் விபரங்களைத் திரட்டி வருகின்றார்.

## அகாலிதள் கண்டனம்!

அமிர்தஸரஸ், பெப் 22 பஞ்சாப்பில் தோன்றியுள்ள அமைதியின்மைக்கு இந்திரா காங்கிரஸ்தான்காரணமென்று குற்றஞ்சாட்டியுள்ள அகாலிதள் கட்சி புதுடில்லியில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்த முடிவு செய்துள்ளது.

பஞ்சாப் நிலை குறித்து ஆராய்வதற்காக நேற்றுக்கூடிய அகாலிதள் இம்முடிவை எடுத்தது. (கு)

# மகாபொல சுவீப்

4-வது மகாபொல லொத்தர் சீட்டிழுப்பு கடந்த திங்கட்கிழமை பெலிமதுவையில் நடைபெற்றது. வெற்றி பெற்ற டிக்கட்டுகளின் விபரம் வருமாறு:

1-வது பரிசு:

**0194 B 0377**

ரூ. 1,002,500

2-வது பரிசு:

**0531 L 1069**

ரூ 502,500

3-வது பரிசு:

**0632 L 1302**

ரூ. 252,500

4-வது பரிசு:

014 S 2991

ரூ. 102,500

5-வது பரிசு:

1425 X 2714

ரூ. 52,500

ரூ 10 ஆயிரம் பெறுமதியான ஐந்து பரிசுகள்:

| | |
|---|---|
| 0080 A 0947 | 031 W 2419 |
| 0414 C 0867 | 0070 D 0396 |
| 0549 O 1337 | |

ரூ. 5 ஆயிரம் பெறும் 10 பரிசுகள்:

| | |
|---|---|
| 0891 K 1509 | 0576 K 1973 |
| 1088 X 2492 | 0672 Q 1609 |
| 0277 C 0941 | 0621 Q 1859 |
| 0312 B 0100 | 1176 W 2319 |
| 0705 J 1108 | 0273 C 0456 |

மற்றும் 100 பெறுமதியான பரிசுகள்:

| | | | |
|---|---|---|---|
| 0647 M 1056 | 1360 V 2378 | | |
| 0[illegible]10 H 0095 | 0377 A 0859 | | |
| 0083 B 0136 | 0330 A 0460 | | |
| 0273 C 027 | 0411 H 0955 | | |
| 0387 G 0111 | 0579 J 1294 | | |
| 0842 N 1375 | 0608 K 1553 | | |
| 0258 A 0666 | 0430 A 0614 | | |
| 1[illegible]39 U 2330 | 0160 C 0221 | | |
| 0820 P 1904 | 0345 G 0545 | | |
| 1356 Y 2180 | 0407 B 0127 | | |
| 1423 V 2535 | 0774 M 1839 | | |
| 0770 M 1921 | 0092 B 0649 | | |
| 0206 B 0179 | 1192 R 2558 | | |
| 1290 T 2217 | 0921 Q 1460 | | |
| 0533 N 1772 | 0076 H 0430 | | |
| 0242 G 0115 | 0812 P 1967 | | |
| 0216 H 0763 | 0855 K 1612 | | |
| 0590 M 1292 | 0620 M 1323 | | |
| 0196 B 0393 | 0364 H 0997 | | |
| 0301 C 0728 | 0797 O 1238 | | |
| 0896 Q 1162 | 0196 F 0513 | | |
| 1[illegible]42 W 2024 | 027 V 2328 | | |
| 0389 D 0965 | 1199 R 2256 | | |
| 1107 T 2016 | 0329 A 0072 | | |
| 118 W 2377 | 0298 C 08[illegible]6 | 0033 H 0226 | 1170 X 235 4 |
| 0541 O 1799 | 0168 F 027 | 0577 O 17 1 | 0379 H 063 6 |
| 1197 R 2771 | 0138 F 0756 | 0096 A 0699 | 0740 L 111 5 |
| 0415 E 0439 | 0355 D 0196 | 1821 R 2754 | 0405 F 081 0 |
| 0313 E 0902 | 0010 G 0034 | 0723 K 1243 | 0024 E 0086 |
| 0908 K 1410 | 0534 O 1414 | 1316 X 2926 | 1030 T 2922 |
| 1191 X 20[illegible]7 | 0787 Q 1943 | 0004 D 0603 | 0110 H 0522 |
| 1251 X 2301 | 0308 D 0681 | 0049 B 0350 | 0725 L 1645 |
| 0667 Q 1198 | 0426 G 0665 | 0102 A 0553 | 0[illegible]86 Q 1751 |
| 0797 J 1152 | 0597 K 1058 | 0363 G 0930 | 0865 J 1[illegible]95 |
| 1435 V 2849 | 0737 J 1374 | 0610 M 1954 | 0643 K 1716 |
| 134[illegible] U 2732 | 0314 C 0129 | 1166 R 2329 | 1192 S 2029 |
| 0318 H 0115 | 1197 W 2638 | | |
| 1136 R 2839 | 0879 K 1161 | | |

[இவை யாவும் உறுதிப்படுத்தப்படவேண்டும்].

## தொல்புரம் கமநலசேவையில் 4பதவிகள் காலி!

[பண்டத்தரிப்பு]

தொல்புரம் கமநலச்சேவை நிலைய பிரிவில் நான்கு பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் பதவிகள் இதுவரை நிரப்பப்படாது காலியாக இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம் மேற்கு, கட்டுக்கோட்டை கிழக்கு, சங்கானை கிழக்கு ஆகியவற்றின் பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் பதவிகளே வெற்றிடங்களாக இருக்கின்றன. இதனால் இப்பகுதிகளிலுள்ள விவசாயிகள் தங்கள் வெள்ள அழிவுகளை பதிவு செய்வதற்கும் மற்றும் கமத்தொழில் திணைக்களத்தின் உதவிகளை பெறுவதற்கும் பெருஞ்சிரமங்களை எதிர்நோக்கவேண்டியிருப்பதாக புகார் தெரிவிக்கப்படுகின்றது.

## யாருடையது?

திருவாளர்கள் மொலையன்-ராமையா, கருப்பையா அருணாசலம் ஆகியோரின் அடையாள அட்டைகளையும் வேறு சில ஆவணங்களையும் யாழ். ஆனைப்பந்தியடியைச் சேர்ந்த திரு பொ. முத்துச்சாமி என்பவர் கண்டு எடுத்து ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் தகுந்த அத்தாட்சி காட்டிப்பெற்றுக் கொள்ளவும்.

## அணுவாயுதங்களை உலகிலிருந்து அடியோடு அகற்றவேண்டும்!

### இந்தியா - செக்கோ கூட்டாக வலியுறுத்து

புதுடில்லி, பெப் 22 அணுவாயுதங்களையும்அவை போன்ற வேறு ஆயுதங்களையும் குறைக்க வேண்டியதன் அவசியத்தை இந்தியாவும் செக்கோஸ்லாக்கியாவும் வலியுறுத்தியுள்ளன.

இந்தியாவிற்கு விஜயம்செய்துள்ள செக்கோசிலாவாக்கிய பிரதமர் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்திய பின்னர் வெளியிட்ட கூட்டறிக்கையிலேயே மேற்கண்டவாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

அணுவாயுதங்களையும் அவை போன்ற ஆயுதங்களையும் அடியோடு அகற்றவேண்டுமென்ற லட்சியத்தை ஒவ்வொருநாடும் மேற்கொள்ளவேண்டும் என்றும் அந்த அறிக்கையில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (கு)

# தெ. ஆபிரிக்கா-மொஷாம்பிக் பாதுகாப்பு உடன்படிக்கை!

## அயல்நாடுகளுடன் நல்லுறவை ஏற்படுத்த தென்னாபிரிக்கா முதற்தடவை இணக்கம்

கேப்டவுண், பெப் 22 தென்னாபிரிக்கா அதன் அயல் நாடான மொஷாம்பிக்குடன் பாதுகாப்பு உடன்படிக்கை செய்துகொள்ள முன்வந்துள்ளது.

அயல்நாடுகளுடன் நீண்டகாலமாக பகைமையை வளர்த்துவந்ததென்னாபிரிக்கா அதன் அயல்நாடு ஒன்றுடன் சுமுகநிலையை ஏற்படுத்த முன்வந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

தென்னாபிரிக்க வெளிநாட்டமைச்சர் நேற்று முதற்தடவையாக மொஷாம்பிக் வந்தபோது பூரண மரியாதைகளுடன் வரவேற்கப்பட்டார். அவருடைய இந்த விஜயமே தென்னாபிரிக்காவின் மனமாற்றத்தை வெளிக்காட்டுவதாக அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (கு)

### மணிவாக்கு

வரலாற்றுப் போக்குக்கு நியாயங்களை பலியிட்டு விடாமல் நியாயங்களை நிலைப்படுத்தும் வகையில் வரலாற்றுப் போக்கையே மாற்றவேண்டும்.

—நேரு

## நமதுநோக்கு

# இலவசக்கல்வி

காசா இலேசா? என்றொரு நாடோடி வாசகம் உண்டு; எதனையும் எவரையும் காசுக்கு வாங்கி விடலாமென்ற மனத்திமிரில் எழுந்த வாசகம் இது.

படித்தவன் பதவியில் உயர்ந்தவன் சமூகத்தில் செல்வாக்குடையவன் எவனாயிருந்தாலும் காசுபணம், சொத்துப்பத்து உள்ளவனாகவே இருக்கவேண்டும்; இந்த அடிப்படைக் கொள்கை இன்றுதான் வேடேறிவிட்டதா?

உப்பில்லாப் பண்டம் குப்பையில் என்றவாறு, பணமில்லாப்படிப்பு என்ன செய்யுமென்ற எண்ணம் மீண்டும் தலைவலியை ஏற்படுத்துவதுபோல தோன்றுகிறது.

இன்றைய சமுதாய நோக்கு இத்தகைய பிற்போக்குக்கு ஊக்கமளிக்கிறது. 'இ. போ. ச' வை நம்பியாபயணத்தில்வெளிக்கிட்டீர்?' என்றொரு கிண்டல். அரசாங்க ஆஸ்பத்திரியில் நோயாளி சிகிச்சை பெறுவதானால் முற்பிறவியில் புண்ணியம்செய்திருக்க வேண்டும். இவ்வாறுபேசத் தெரிந்தவர் பேரம் பேசுங்காலம் இது; இதற்கு மறுத்தான் விடக்கூடியவர்கள் மௌனம் சாதிக்கின்றனர்.

இன்னொரு வகையில் இன்றைய போக்கைவிளக்க வேண்டுமானால்; பாடசாலைக்கெதிரே அப்பாடசாலையின் திறமையான ஆசிரியர்கள் காசுக்குப்பாடஞ்சொல்லுகின்றனர்; இ. போ. ச. பஸ் நிலையத்துக்கெதிரே தனியார் பஸ் சேவை துரிதமாகச் செயற்படுகின்றது. அரசாங்க ஆஸ்பத்திரிக்கு அணித்தாய் தனியார் மருத்துவமனை திறம்பட நடைபெறுகின்றது. காசா இலேசா?போக்குவரத்தைப் பொறுத்தவரையில் இரண்டிலும் காசு; ஒன்றில்போவது சங்கடம்; மற்றதில்போவது வேகம்; சில சமயம் அபாயம்.

இவ்வாறு இந்நாட்டின் பகிரங்கசேவைகள் பிளவுபட்டிருக்கின்றன.

அரசாங்கம் உண்மையில் மக்கள் சேவை மகத்தானதாக நடக்கவேண்டுமென்று எண்ணுகிறது; சொல்கிறது; செயற்பட எத்தனிக்கிறது; எவ்வளவு தூரம் வெற்றிப் பாதையில் செல்கிறது? அதுதான் முக்கிய கேள்வி.

கல்வி, சுகாதாரம், போக்குவரத்து— இம் மூன்றையும் ஒருங்கு சேர்த்து அரசாங்க நிர்வாகத்தை குட்டிச்சுவராக்கும் சக்திகள் உள்ளும் புறமும் அநேகம்.

அநேகம் என்று சொல்லும்போது வாய் கிடாச் சிவல்களான வாக்காளர் பெரும்பான்மையரென் பதை நாம் மறக்கவில்லை; நடுமட்டத்தினரின் குமுறல்களே பிரபலம் பெறுகின்றன.

முதலாளித்துவ கூட்டமும் அதற்கு வால்பிடிக்கும் சமூகப் பிராணிகளுமே இந்த முற்போக்கு சாதனங்களை கண்டிக்கும் திசை திருப்ப முற்படும் கூட்டத்தினர்

'இலவசக் கல்வி' என்ற 40 ஆண்டு வயதடைந்த கல்வி முறை இன்றும் ஒரு பரிகாசமான கருத்துக்கிடம் கொடுத்துவருகிறது இதனை எதிர்த்தவர், எதிர்ப்பவர் யாரென்று இனங்காண்பது கடினமல்ல; சமுதாயப் போக்கை புரிய முடியாத பேதையர்.

இவர்கள் மறந்து விடுவது நேர்முகமாகவும், மறைமுகமாகவும் நினைவூட்டப்பட்டு வருகிறது

அரசாங்கம் வசதியற்ற பிள்ளைகளுக்கு ஸ்தாபித்த மத்திய மகா வித்தியாலயங்கள், மும்மொழி செலுத்தும் தேசியபாடசாலைகள் அனைத்திலும் வழங்கும் இலவசக் கல்வி நாடளாவிய வகையில் பல்லாயிரக்கணக்கான பிள்ளைகளுக்கு கல்வி உயர்வை வழங்கியிருக்கிறது; சமுதாயத்தில் கணிசமான முற்போக்கை விருத்தி செய்கிறது.

பேராசிரியரும், சந்திர மண்டல ஆய்வாளரும் விஞ்ஞானியுமாகிய திரு பொன்னம்பெருமா, மாகோ மத்திய வித்தியாசாலையின் தாய்மொழிக் கல்வியின் படைப்பெனப் பெருமை படைகிறார்.

அண்மையில் கொழும்பு சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவராகத் தெரியப்பட்ட திரு றம் பண்டா இலவச கல்வியின் பெரும் படைப்பு; இப் பதவியை முதன்முதலவகிக்கும்மத்திய மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர்; அநுராதபுர மாவட்டத்துக்கு பெருமை தேடியிருக்கிறார்.

யாழ்ப்பாணத்தில் இலவசக் கல்வியின் சாதனைகள் எட்டில் அடங்கா; தனி மாணவர் மட்டுமல்ல, கிராமிய பாடசாலைகளின் தரம் உயர்ந்த வாறென்னே!

'பெற்றோரின் பண பலத்தில் பிள்ளையின் கல்வி தங்கியிருக்கலாகாதென்றார்' அமரர் கன்னங்கரா; 'சிறுவர் எல்லோரும் பெரிய வீரராக வருதல் வேண்டும்' என்றார் சாரணர் படையை நிறுவிய பெருவள்ளல் பேடன் பவல் பிரபு.

இவ்விரண்டையும் பலன் படுத்தி யாழ்ப்பாணமாவட்டத்தில் முதல் இடமும் அகில இலங்கையில் இரண்டாவது இடமும் பெற்ற பாடசாலை வட்டுக்கோட்டை மகாவித்தியாலயம். அதன் சாரணர்குழு ஆற்றிய சாதனை பொன்னேற்பொறிக்கப்படவேண்டும்.

அவசரமென்றால் சோதிடம் பார்த்துவிட்டு தனிகார் 'வானி'ல் பயணம் செய்யுங்கள்; காணியை விற்றும் தனியார் மருத்துவ மனையில் வைத்தியம்செய்து படுக்கையிலேயே ஆண்டவனுடன் இரண்டறக் கலவுங்கள்.

இலவசக் கல்விக்கும் தேசிய பாடசாலைகளுக்கும் உபகாரம் செய்யாவிட்டாலும் அபகாரம் செய்யாதீர்!

சாதாரண தமிழனுக்கு அச்சுப்பயன்வழங்கிய

# சீகன் பால்கு

தமிழ் அச்செழுத்தின் தந்தை தரங்கம்பாடியிலே முதற்தமிழ் நூலகமமைத்த பெருமைக்குரியவர் இந்திய காகித ஆலையின் முதல் விதையை விதைத்தவர். அவர்தான் ஜெர்மானியரான சீகன் பால்கு எனும் கிறிஸ்தவத் தொண்டர் இன்று (மாசி 23) அன்னாரின் நினைவு தினம்.

36 ஆண்டுகள் 05 மாதங்கள் 80 நாட்கள் வாழ்க்கை வட்டமுடையவர் சீகன்பால்கு ஜெர்மனி 'புலிஸ்னிக்' மண்ணிலே பிறந்தார் தந்தை பார்த்தலோமியா. தாயார் கத்தரினுவின் அன்பில் வளர்ந்தார் பெர்லின் சர்வகலாசாலையிலே அறிவு பெற்றார் டெனிஷ் மன்னன் 4-ம் பிரெட்ரிக்கின் கட்டளை அவரை தரங்கம்பாடித் தமிழ்மண்ணில் மறைபரப்பாளராகக் காலடி யெடுத்து வைக்க வைத்தது.

### பற்றிமாகரன்

தரங்கம்பாடியில் எல்லப்ப உபாத்தியாயரின் திண்ணைப் பள்ளியிலே மண்ணில் அமர்ந்து தமிழெழுத்துக்களை மண்ணிலே எழுதித் தமிழ்கற்றார். பின்னர் டெனிஷ் வியாபார நிறுவனத்தில் கடமையாற்றிய அழகப்பனின் உதவியால் தமிழில் வளர்ச்சி பெற்றார். சுகாதிதே தமிழில் அச்சுக்கலை வளர்ச்சி இன்மையின் தாக்கத்தை அவர் நன்குணர்ந்தார். இதனால் தமிழ் எழுத்துக்களை அச்செழுத்தாக்க முனைந்த சீகன் பால்குவின் வேணவா 1710-ல் ஜெர்மன் ஹாலி நகரில் தமிழ் அச்செழுத்து வார்க்கப்பட்டதால் பூர்த்தியாகியது பின்னர் தரங்கம் பாடியில் அச்சுப்பொறி யமைக்கப்பட்டது. அச்சுத்தாளை உற்பத்தி செய்யவென வைக்கோலில் இருந்து காகிதம் தாள் தயாரிக்கு தொழிற்கூடம் ஒன்று அமைக்கப்பட்டது திண்ணைப்பள்ளிகள் வைத்து பாமரர் அறிவு வளர்த்த சீகன் பால்கு சாதாரண தமிழனுக்கும் அச்சுநூல் கிடைக்கக்கூடிய முறையில் அச்சுநூல்களை ஜனநாயகமயப்படுத்தினார் அதுவரை மதபோதகர்களுக்கும் மறைபரப்பாளருக்குமே அச்சுப்பயன் கிட்டியது என்பது கிந்தனைக்குரியது

சீகன் பால்கு தரங்கம் பாடியிலே நூலகமொன்றையும் அமைத்தார் இதில் 119 சுவடிகள் இந்து - கிறிஸ்தவ - முஸ்லீம் மதங்களைச் சார்ந்தவை பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது உலகநீதியின் ஜெர்மன் மொழிபெயர்ப்பாளராகவும் 40000 சொற்களை கொண்ட மயபார் அகராதி, 17000 இலக்கியச் சொற்களை கொண்ட செந்தமிழ் கொடுந்தமிழகராதி, தொகுப்பாளராகவும், இலத்தீன் -தமிழ் இலக்கணப்பதிப்பாளராகவும் சீகன் பால்கு பெருமையுறுகிறார். இவ்வாறாக தமிழ்மண்ணை வளப்படுத்திய சீகன் பால்கு தரங்கம் பாடியிலேயே மீளாத்துயில் கொள்கிறார்

## தெருவீதிகளில் பெண்கள் பாதுகாப்பு?

அண்மையில் ஈழநாடு பத்திரிகையில் கட்டுடை வி சரஸ்வதி ''மக்கள் கருத்தில்'' வெளியிட்டவற்றைக் கண்ணுற்ற எனக்கு சில சந்தேகங்கள் எழுந்துள்ளன.

மக்கு நீரிணைக்கப்பால் தனக்கு ஏற்பட்ட அனுபவங்கள், ஜப்பான் தேசத்தில் பெண்களின் பாதுகாப்பு ஆகியவற்றை கட்டுடை சரஸ்வதி சுட்டிக்காட்டியிருக்கிறார்.

இது உண்மையாயின் உலகின் மேற்குறிப்பிடப்பட்ட பகுதிகளில் உள்ள பெண்கள் கற்புடனும் கண்ணியத்துடனும் வாழ்கிறார்கள். பிற ஆடவர்களை ஏறெடுத்தும் பாரார்கள் படாடோபமாக ஆடம்பரமாக ஆடை அணிகளை அணியாது எளிமையை விரும்புபவர்கள், இத்தகைய சூழ்நிலையில் அவர்களுக்கு ஆண்களால் தொல்லைகள் ஏற்படாதது இயற்கையே எனத் தோன்றுகிறது.

இப்படித்தான் வாழவேண்டும் என்பதற்கிணங்க பெண்கள் வாழவேண்டும். ஆனால் எமது நாட்டுப் பெண்களிற் சிலர் ''எப்படியும் வாழலாம்'' என்ற கருத்தைக்கொண்டுள்ளார்கள் போலும் 'கண்டதே காட்சி, கொண்டதேகோலம்'' என்பதில் நம்பிக்கை உடையவர்கள் போலும் குறிப்பாக உடை விஷயத்தில் இக்கூற்று முற்று முழுக்க உண்மை.

## மக்கள் கருத்து

உடையிலிருந்து உள்ளத்தை அறியலாமென்கிறார் ஷேக்ஸ்பியர். எனவேஇக்காலப்பெண்களின் உடை எங்கள் பண்புக்கமையவில்லை. இவர்கள்உடைகளைக் கவனிக்கும்போது நாட்டில் இவர்களில் துணிப்பஞ்சம் ஏற்பட்டுள்ளதா? என்றுகூடக் கேட்கத் தோன்றுகிறது.

இத்தகைய பெண்கள் நடமாடும் இடங்களில் ஆண்கள் கெட்டுப்போகும் அபாயம் உண்டு எனவே ''தெருவீதிகளில் நம்பெண்களின் பாதுகாப்பு'' என்பது பிரச்னை உண்மையான ''தெருவீதிகளில் நம் ஆண்களின் பாதுகாப்பு'' என்று மாறவும் இடமுண்டு.

இன்று 'பெண் விடுதலை' என்ற போர்வையில் ஒரு ஆணுக்கும் எத்தனை உரிமைகள் இருக்கமுடியுமோ அத்தனை உரிமைகளும் அதற்கு மேலாகப் பல சலுகைகளும் பெண்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள ஒரு நாட்டில் பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லை எனக்கூறுவது பேதமையாகும் பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்பதில்உண்மை இருக்கலாம் ஆனால் அது பெரும்பாலும் அவர்களாலேயே வலிந்து வருவிக்கப்பட்டது

அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட உரிமைகளையும் சலுகைகளையும் அவர்கள் துஷ்பிரயோகம் செய்வதே இதற்கு முக்கிய காரணம்.

எனவே பெண்களின் பாதுகாப்பு பெண்களின் கையில் தான் உண்டு ''தீதும் நன்றும் பிறர் தர வாரா'' இதனையே வள்ளுவரும் ''சிறைகாக்கும் காப்பு எவன் செய்யும் மகளிர் நிறைகாக்கும் காப்பே தலை'' என்றார்.

ந. சிவநமாரன்
நல்லூர்.

### அசுர சாதனை!

வெள்ளிவிழா மலர் கண்டு மட்டற்ற மகிழ்ச்சி. மிகவும் பொருத்தமான முறையில் யோகர் சுவாமிகளின் படம் மலரை அலங்கரிப்பது மன நிறைவாய் இருக்கின்றது.

வெகுகவனத்துடன் கூடுமானவரை ஈழநாட்டுடன் தொடர்பு கொண்ட சகலரையும் பற்றி நினைப்பூட்டியது பெருமைப்படத்தக்கது.

ஈழநாடு வெளிவந்த காலம் என் மனதில் பசுமையாக இருக்கின்றது. அப்பொழுது நான் யாழ். இந்துக் கல்லூரியில் கல்வி கற்ற சமயம் மறைந்த ஆசிரியர் ''தேவன்'' அவர்கள் நெறிப்படுத்திய 'கூடப்பிறந்த குற்றம்' நாடகம் கல்லூரி மேடையில் இடம்பெற்ற போது நானும் அதில் நடித்தேன். ஒரு கட்டத்தில் ஈழநாடு பத்திரிகையைக் கையில் பிடித்தபடி ''வர வர இந்த ஈழநாட்டில் நல்ல விஷயங்களாய்தான் போடுகிறார்கள். நல்ல சோக்கான பேப்பர்!'' என்று ஒரு வசனம்பேசி வைத்தேன். நாடகம் முடிந்ததும் ஆசிரியர் தேவன் என்னப்பா! ஈழநாடு விளம்பரத்துக்கு ஏதும் பணம் தந்தார்களா?'' என்று கேலியாக வினவினார். அந்தளவுக்கு ஈழநாடு எங்களைக் கவர்ந்தது.

மலரில் திரு. கோபாலரத்தினம் திரு. அம்பிகைபாகன் ஆகியோரது எழுத்துக்கள் நாமறியாத பலவிஷயங்களை வெளிப்படுத்தியுள்ளன. ஆக்கமுள்ள கட்டுரைகளையும் அரியபல விஷயங்களையும் வெகுநேர்த்தியாக அதுவும் மிகவும் கவனத்துடன் பிரசுரித்துள்ளீர்கள். 56 பக்கங்களில் ஒருமலர் வெளியிடுவது என்பது அரிய ஒரு விஷயமாகும். நீங்கள் ஒரு அசுர சாதனை செய்துவிட்டீர்கள்!

தமிழ் கூறும் நல்லுலகம் இருக்கும்வரை ஈழநாடு இருக்கும் என்பதே எனது வாழ்த்தாகும்.

து. வைத்திலிங்கம்
பூநகரி.

### சுவீப் முடிவு

[கொழும்பு]

கொழும்பில் நேற்று அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட 958-வது தேசிய லொத்தர் சீட்டிழுப்பின் முதல் மூன்று பரிசுகள் பெறும் டிக்கெட்டுகள் விபரம் வருமாறு:-

1-வது பரிசு
**02 V 0799**
ரூ 1,88,600-00

2-வது பரிசு
**17 K 0088**
ரூ 70,725-00

3-வது பரிசு
**15 U 0122**
ரூ. 23,575-00

தலா ரூபா 848-70 சதம் ஆறுதல் பரிசு பெறும் நூறு டிக்கெட்டுகள் வருமாறு:

| | |
|---|---|
| 01 A 0271 | 09 A 0919 |
| 11 A 0701 | 12 A 0150 |
| 04 A 0267 | 10 A 0475 |
| 11 A 0787 | 16 A 0869 |
| 19 A 0248 | 01 B 0371 |
| 15 B 0899 | 14 B 0654 |
| 16 B 0272 | 19 B 0969 |
| 02 C 0674 | 06 C 0705 |
| 06 C 0019 | 12 C 0104 |
| 16 C 0671 | 02 D 0558 |
| 09 D 0490 | 09 D 0920 |
| 05 E 0653 | 14 E 0676 |
| 09 F 0649 | 17 F 0214 |
| 19 F 0664 | 01 G 0219 |
| 13 G 0455 | 17 G 0444 |
| 20 G 0061 | 05 G 0019 |
| 14 G 0354 | 19 G 0561 |
| 20 G 0874 | 07 H 0888 |
| 18 H 0388 | 19 H 0972 |
| 06 J 0149 | 07 K 0771 |
| 19 K 0059 | 04 L 0750 |
| 07 L 0658 | |
| 09 L 0395 | 17 L 0666 |
| 19 L 0144 | 09 M 0608 |
| 15 M 0383 | 18 M 0626 |
| 06 N 0961 | 10 N 0769 |
| 07 N 0175 | 11 N 0974 |
| 14 N 0510 | 02 O 0346 |
| 04 O 0724 | 18 O 0007 |
| 20 O 0034 | 06 P 0421 |
| 08 P 0199 | 08 P 0738 |
| 16 P 0124 | 17 P 0375 |
| 18 P 0319 | 13 Q 0814 |
| 18 Q 0023 | 02 R 0946 |
| 17 R 0934 | 20 R 0843 |
| 02 S 0600 | 07 S 0855 |
| 10 S 0174 | 01 T 0497 |

[5-ம் பக்கம் பார்க்க]

## நல்லூர் கொள்ளை வழக்கு:

# "ஏமாற்றினல் துப்பாக்கியால் சுட்டு உயிரைப் பொசுக்குவோம் என்ருர்"

## தொழிலதிபர் தொடர்ந்து சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

என்னிடம் பணம் இல்லை என்று கூறியதும். 1-ம் எதிரி வானிலிருந்து இறங்கி துப்பாக்கியால் மேல் நோக்கிச் சுட்டுவிட்டு, "இது உண்மையான துப்பாக்கி" என்று கூறிவிட்டு, வானை வந்த வழியில் திருப்பிச்சென்ருர். கோவிலடியில் என்னை இறக்கிவிட்டு "என்னை ஏமாற்றினல் திரும்பிவந்து உயிரைப் பொசுக்கிவிடுவோம்" என்று எச்சரித்தார்.

நல்லூர் கொள்ளை வழக்கில் குறுக்குவிசாரணையின் போது சாட்சியமளித்த தொழிலதிபர் நாகமுத்து காசிவிஸ்வநாதன் மேற்கண்டவாறு கூறினுர்.

இவ்வழக்கு யாழ். நீதிமன்றத்தில் நீதவான் எஸ். நாகராசா முன்னிலையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இவ்வழக்கில், நல்லூரில் 83 அக்டோபர் 13-ம் திகதி நாகமுத்து காசிவிஸ்வநாதனிடம் 8000 ரூபா பெறுமதியான இரு சங்கிலிகளையும், 17,000 ரூபா காசோலையையும் கொள்ளையடித்ததாக மூன்று இளைஞர்மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது. 17,000 ரூபா காசோலையை கொள்ளையடித்த பொருள் எனத்தெரிந்திருந்தும் அதனை வைத்திருந்ததாக 1-ம் எதிரி மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

1-ம் எதிரி சார்பில் சட்டத்தரணி கே. லோகசுந்தரமும், 2-ம் எதிரி சார்பில் சட்டத்தரணி ஜிம்மி ராசரத்தினமும், 3-ம் எதிரி சார்பில் சட்டத்தரணி ஆர் விசுவநாதனும் ஆஜரானுர்கள். பொலிஸ் தரப்பில் சப்-இன்ஸ்பெக்டர் ஸ்ரீதரன், கான்ஸ்டபிள் தனபாலசிங்கத்தின் உதவியுடன் ஆஜரானுர்.

1-ம் எதிரியின் சட்டத்தரணி கே. லோகசுந்தரம் சுமார் மூன்று மணி நேரம் குறுக்குவிசாரணை செய்தார்.

குறுக்குவிசாரணையின்போது சாட்சியமளித்த தொழிலதிபர் நாகமுத்து காசிவிஸ்வநாதன் கூறியதாவது:-

"என்னை வானில் திருப்பிக் கொண்டுவரும்போது 'என்னய்யா, உங்கள் கடைசிமுடிவு என்ன? என்று இடதுபக்கம் இருந்தவர் கேட்டார். 2 சங்கிலியும், காசோலையும் தருவதாகக் கூறினேன். திங்கட்கிழமைக்குமுன் பொலிசுக்குப் போகக்கூடாது என்று அவர் எச்சரித்தார்

சட்: நீர் ஞாயிற்றுக்கிழமையே பொலிசுக்குப் போய் விட்டீர்? ஆம்

சட்: ஏன் ஞாயிறுபோனீர்?- பேப்பரில், காசோலை பற்றி ஒரு செய்தி வந்திருந்தது. அதை ஞாயிறு படித்ததும் பொலிசிற்குப் போனேன்

சட்: அவர் பயமுறுத்தியிருந்தாரா?-ஆம்.

சட்: அப்படியென்ருல் அவர்கள் சொன்னபடி திங்கள் போகாமல் ஞாயிறு ஏன் போனீர்?-புகார்செய்ய

சட்: அப்படியென்ருல் மறுநாள் சனிக்கிழமை போயிருக்கலாமே?-பயம் காரணமாகப் போகவில்லை.

சட்: ஞாயிறு பயம் தெளிந்துவிட்டதா?-இல்லை.

சட்: அவர்களை அடையாளம் காட்டத் தெரியுமா?-ஒருவரைத் தெரியும். முகம் ஞாபகமிருக்கிறது.

சட்: அடையாள அணிவகுப்பு நடைபெற்றதா?-இல்லை.

சட்: எப்படி அடையாளம் கண்டீர்?-அவர் சிகப்பு நிறம்

சட்: முதலாவதாக நிற்பவர் சிகப்பு நிறமா?-அது சிகப்புத்தான்

சட்: நகைகளை அடையாளம் காட்டினீரா? - இல்லை. எனது நகைகளைக் காட்ட முடியும்

சட்: பொலிஸிற்கு எப்ப முறைப்பாடு செய்தீர்?-83 அக்டோபர் 16ம் தேதி

சட்: சம்பவம் நடந்தது 13-ம் தேதி?-ஆம்

சட்: எத்தனை நாட்களுக்குப் பின்னர் பொலிஸிற்கு புகார்செய்யப் போனீர்?-4 நாட்களுக்குப் பின்

சட்: ஏன் நீர் உடன் போகவில்லை?-வெளியில் வரக்கூடாது] என்று மிரட்டியிருந்தனர்

சட்: அவர்கள் கட்டுப்பாட்டில் இருந்தீர்?-ஆம்

சட்: அவர்கள் சாப்பிடக் கூடாதென்ருல் சாப்பிடமாட்டீர்?-ஆம்

சட்: எத்தனை பேர் துப்பாக்கிகளுடன் இருந்தனர்?- ஒருவர்.

சட்: மற்றவர்கள் வைத்திருக்கவில்லை.

சட்: எவ்வளவு காசோலை- 17,000 ரூபா

சட்: எங்குவைத்து எழுதினீர்?-என் வீட்டில் வைத்து எழுதினேன் எழுதும்போது வேறு எவரும் இருக்கவில்லை

சட்: யாருடைய கையெழுத்துப் போட்டீர்?-எனது கையெழுத்து

சட்: பொலிசிற்கு போனதும் 1ம் எதிரியின் பெயரைக் கொடுத்தீரா? - பெயர் தெரியாது

சட்: மற்றவர்களின் பெயரைக்கொடுத்தீரா? - இல்லை

சட்: பொலிஸார் உம்மைத் தேடி வந்தார்களா? - இல்லை நான் தான் பொலிஸிற்கு போனேன். பேப்பரில் 17,000 காசோலையுடன் மூவர் பிடிபட்டதாக வந்தது. அதனைப் படித்ததும் போனேன்

சட்: உமது வீட்டில் 10 பேர் இருந்தார்கள் என்றீர் அன்று வந்தவர்களை மடக்கிவிடக் கூடிய ஆட்கள் இருந்தனர்? - வீட்டில் கூடியவர்கள் பெண்கள் தான் இருந்தனர்

சட்: 6 பேர் ஆண்கள்? - ஆம்.

சட்: உமது வீட்டிலுள்ள வேறு ஆட்கள் சாட்சி சொன்னுர்களா? - இல்லை.

சட்: வானில் நீர் எங்கு இருந்தீர்? - முன் ஆசனத்தில் சாரதிக்கும் மற்றவருக்கும் நடுவில் இருந்தேன்.

சட்: சாரதியைப் பார்த்தீரா? - இல்லை.

சட்: ஏன் பார்க்கவில்லை? - பயத்தினுல் பார்க்கவில்லை.

சட்: சாரதி துப்பாக்கி வைத்திருந்தாரா? - இல்லை.

சட்: மற்றவர் துப்பாக்கி வைத்திருந்தார்? - ஆம்.

சட்: அவரைப் பார்த்தீரா? -ஆம்.

சட்: துப்பாக்கி வைத்திருந்தவரைப் பயமில்லாமல் பார்த்தீர். ஆனுல் துப்பாக்கி இல்லாத சாரதியைப்பயத்தினுல் பார்க்கவில்லை என்கிறீரா? - ஆம்.

காசோலையை வங்கியில் மாற்றமுடியாமல் செய்யலாம் என்பது உமக்குத்தெரியும்? - ஆம்.

சட்: வங்கிசட்டவிதிகளுக்கு மாருக காசோலை இருந்தால் அதை மாற்ருமல் திருப்பி அனுப்புவார்கள்? - ஆம்.

சட்: வங்கியில்காசில்லாவிட்டாலும் திருப்பி அனுப்புவார்கள்? -ஆம்.

சட்: வங்கியில் மாற்ருமல் விட்டும் அது ஒரு பெறுமதியில்லாத கடுதாசி? - ஆம்.

சட்: சாதாரணமாக இன்னெருவர் காசோலையை மற்றெருவர் வைத்திருந்தால் அது குற்றமில்லை? - எனக்குத் தெரியாது.

சட்: காசோலை எப்ப எழுதினீர்? - 13ம் தேதி

சட்: ஏன் 15ம் தேதி என்று போட்டீர்? - வங்கியில் பணமில்லை என்பதால்.

சட்: 14ம் தேதி என்று போட்டிருக்கலாமே? - நான் போடவில்லை.

2-ம் எதிரியின் சட்டத்தரணி ஜிம்மிராசரத்தினத்திடம் குறுக்குவிசாரணை செய்தார்.

சட்: வாகன இலக்கம் உமக்குத் தெரியாது? -தெரியாது.

சட்: சம்பவம் இரவு நடந்தது?-ஆம்

சட்: காசோலையால் உமக்கு எவ்வித நஷ்டமும் ஏற்படவில்லை?-இல்லை

சட்: வேறு யார் வந்தார்கள்?-தெரியாது

3-ம் எதிரியின் சட்டத்தரணி ஆர். விசுவநாதன் குறுக்கு விசாரணை செய்தார்

சட்: 2 சங்கிலிகளும் உமது 2 பிள்ளைகளின் உடமையிலிருந்து பறித்தெடுக்கப்பட்டது?- ஆம்

விசாரணை மார்ச் 2-ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது (எ)

## மாதகல் முகாம் அகதிகளுக்கு புனர்வாழ்வு நடவடிக்கை

(பண்டத்தரிப்பு)

கடந்த ஜூலை மாதக்கலவரங்களினுல் அகதிகளாக வெளிமாவட்டங்களிலிருந்து இடம் பெயர்ந்து வந்தவர்களுக்காக நிறுவப்பட்ட முகாமகளில் ஒன்ருன மாதகல் 'வாழ்வகம்' அகதிகள் முகாமிலுள்ள அகதிகளுக்கு புனர்வாழ்வு அளிக்கும் பணியில் யாழ்ப்பாண மறை மாவட்ட மனித முன்னேற்ற நிலையம் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது. இங்குள்ள அகதிகள் குடும்பங்களுக்கு முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள புதுக்குடியிருப்பு என்ற இடத்தில் தலாஇரண்டு ஏக்கர் காணி வீதம் பெற்று அங்கு குடியமர்த்துவதற்கான ஏற்பாடுகளை யாழ்ப்பாண மறை மாவட்ட மனித முன்னேற்றநிலையம் மேற்கொண்டு வருகின்றது.

## எந்த மாவட்டத்துடனும் சேராத 4 கிராமங்கள்

(கிளிநொச்சி)

யாழ்ப்பாண மாவட்டத்துடனும் கிளிநொச்சி மாவட்டத்துடனும் சேராது இடைநடுவில் இருக்கும் செம்பியன் பற்று. முள்ளியான், மருதங்கேணி, கண்டுக்குளம் ஆகிய நாலு கிராம மக்களின் எதிர்காலம் கேள்விக்குறியாக இருக்கிறது.

இந்நாலு கிராமங்களும் தற்போது வெள்ளத்தாக்பெரிதும் பாதிக்கப்பட்டு இங்கு வாழும் மக்கள் பாடசாலைகள், பொது மண்டபங்களில் தஞ்சமடைந்துள்ளனர். இவர்களுக்கு வேண்டிய நிவாரண உதவிகளை வழங்குவது யார் என்று தெரியாது இரு மாவட்ட அதிகாரிகளும் திணறுகின்றனர்.

இந்த நாலு கிராமங்களும் பருத்தித்துறைத் தொகுதியைச் சேர்ந்தது. கிளிநொச்சி மாவட்டம் முற்று முழுதாக கிளிநொச்சித் தொகுதியைச் சேர்ந்ததாகும்.

இதே போன்ற பிரச்னை அக்கராயன் குளத்திலும் உருவாகியுள்ளது. அக்கராயன் மகா வித்தியாலயம் கிளிநொச்சி மாவட்டத்துடன் உள்ளது. அருகில் உள்ள முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த அமைதிபுரம். ஆரோக்கியபுரம் கிராம மக்களும் அக்கராயன் மகாவித்தியாலயத்தில் தஞ்சமடைந்துள்ளனர்.

## "எதிர்காலச் சந்ததியை நாம் மறக்கக் கூடாது!"

(மட்டுவில்)

"நாம் எமது மூதாதையரின் சொத்தை அனுபவித்துவிட்டு எதிர்காலச்சந்ததிக்கான பங்களிப்பைச் செய்யத்தவறினுல் நாம் இன்ன சமுதாயத்திற்குத் துரோகம் செய்தவர்களாவோம்-"

இவ்வாறு மட்டுவில் மகா வித்தியாலய அதிபர் திரு. காசிநாதன் வித்தியாலயத்தில் நடைபெற்ற மரம்நாட்டு விழாவின் போது கூறினுர். மட்டுவில் பகுதி பிரமுகர்கள் இந்த மரம்நாட்டு விழாவில் கலந்து கொண்டனர். அனைவரும் தலா ஒரு தென்னங்கன்று நாட்டினர். பத்திரிகை நிருபர்களைக்கொண்டும் அதிபர் தென்னங்கன்று நாட்டுவித்தார். அதிபர் காசிநாதன் தொடர்ந்து கூறியதாவது:

இன்று நாம் அனுபவிக்கும் சொத்து அத்தனையும் எமது மூதாதையினரால் எமக்கென வழங்கப்பட்டவை. ஆகவே நாம் எமது இளைய தலைமுறைக்கான வளங்களை இன்றே சேகரிக்கவேண்டும்" என்ருர். (கி)

## மீன்பிடிக்கச் சென்ற இளைஞர் கடலுக்குப் பலி!

(புலோலி)

மீன் பிடிக்கக் கடலுக்குச் சென்ற மூன்று பிள்ளைகளின் தந்தையான இளைஞரொருவர் கடலுக்குப் பலியாகி பரிதாபகரமாக மரணமானுர்.

பருத்தித்துறை கற்கோவளத்தில் வசிக்கும் புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியரான ஏரம்பு சோதிநாயகம் (வயது 32) என்பவரே கடலுக்குப்பலியானவராவார். இவரது மரணம் சம்பந்தமான விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். எஸ் வயிரமுத்து மேற்கொண்டார், பருத்தித்துறை பொலிஸ் கான்ஸ்டபிள் எஸ். கந்தசாமி சாட்சிகளை ஆஜர் செய்தார்.

இறந்தவருடன் மீன்பிடிக்கச்சென்ற அரியதாஸ் என்பவர் சாட்சியமளிக்கையில் குறிப்பிட்டதாவது:

இறந்தவரும் நானும் ஒன்ருகவே சென்ருேம். இறந்தவர் தனது கட்டு மரத்திலும் நான் எனது கட்டுமரத்திலும் கடலுக்குச் சென்ருேம். நான் போய் சற்று தூரத்தில் நின்று பார்த்தபோது கட்டு மரத்தில் சோதிநாயகத்தை காணவில்லை. உடனே நான் கரைக்கு வந்து அங்கு நின்றவர்களுக்குச் சொன்னேன். உடனடியாக அவரது வீட்டிற்குத் தகவல் அனுப்பியதுடன் அவரைத் தேடும் முயற்சியிலும் ஈடுபட்டோம். சற்று நேரத்தில் கரையில் இவர் ஒதுங்கியதைக் கண்டோம். உடனடியாக மீட்கப்பட்ட அவர் இறந்து விட்டார்.

இறந்தவரின் மனைவி நிர்மலா (வயது 22) சாட்சியமளித்தார்.

மரணவிசாரணை அதிகாரி கடலில் மூழ்கியதால் ஏற்பட்ட [illegible] மரணமெனத் தீர்ப்பளித்தார்.

### சுவீப் முடிவுகள்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

| | |
|---|---|
| 06 T 0021 | 07 T 0998 |
| 13 T 0302 | 18 T 0558 |
| 19 T 0879 | 02 U 0710 |
| 03 U 0030 | 06 U 0065 |
| 06 U 0079 | 04 V 0578 |
| 03 W 0039 | 13 W 0988 |
| 18 W 0100 | 18 W 0323 |
| 20 W 0854 | 10 X 0909 |
| 20 X 0874 | 01 Y 0044 |
| 03 Y 0735 | 10 Y 0470 |
| 13 Y 0150 | 18 Y 0461 |
| 19 Y 0651 | 09 Z 0696 |
| 11 Z 0158 | 14 Z 0041 |

14 Z 0405

(இவை யாவும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்)

## சர்வதேச மகளிர் தினம்

(சாவகச்சேரி)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு அடுத்த மாதம் 8-ம் திகதி கைதடி அகதிகள் முகாம் நிர்வாகப் பொறுப்புகளை முகாமில் வதிகின்ற மகளிர் குழுக்களின் பிரதிநிதிகள் பொறுப்பேற்றுச் செய்யவுள்ளனர்.

முகாமின் சகல நடவடிக்கைகளிலும் பெண்களின் ஆட்சியே இருக்கவேண்டும் என்பதே இத்தினத்தைக் கொண்டாடுவதற்கான பிரதான நோக்கமாகும் என்று முகாம் நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர். (வெ)

## தங்கச் சங்கிலி வழிப்பறி

(மானிப்பாய்)

யாழ். வண்ணர் பண்ணை தபாற்கந்தோருக்கு அருகாமையில் பட்டப்பகலில் ஒரு பெண்ணிடமிருந்து தங்கச்சங்கிலி அபகரிக்கப்பட்டது.

சைக்கிளில் வந்த இளைஞர்கள் இந்த வழிப்பறியைச் செய்ததாகத்தெரியவருகிறது. மரணச்சடங்கொன்றுக்குச் சென்று திரும்புகையிலேயே இச்சம்பவம் நடைபெற்றதாகத் தெரிகிறது

கலவரத்தில்

# கால்களை இழந்த இளைஞர் வாழ வழிதேடுகிறார்

கால்களை இழந்த நிலையில் தமது இளம் மனைவியையும் நான்கு வயது மகளையும் பராமரித்து வரும் அ. ரஞ்சித் என்ற 39 இளைஞர் தமக்குக் கைகொடுக்கும்படி வேண்டுகிறார்.

1977ம் ஆண்டு கலவரத்தின் போது விஷமிகள் இவரது கால்களை துண்டாடினர். இதன் பின்னர் முடமான நிலையில் இவர் வத்தளை எனுமிடத்தில் காலத்தைக் கழித்தார். ஆனால் கடந்த ஆடிக்கலவரம் இவரது குடிசைக்குத் தீவைத்து இவரைத் துரத்திவிட்டுள்ளது.

யாழ்ப்பாணம் இவருக்குப் புதிது. தமிழன் என்ற ஒரே காரணத்தால் மட்டுமே இங்கு காலங்கழிக்க முடிகின்றது என்கிறார் ரஞ்சித் எங்கு போவது? என்ன செய்வது? என்று திக்குத் தெரியாது நிற்கிறார் இப்பரிதாபமான நிலையிலேயே செஞ்சிலுவைச் சங்கத்தை இவர் நாடியுள்ளார்.

"ஒரு முச்சக்கரவண்டியிருந்தால் ஒருவாறு காலத்தைக் கழிக்கலாம். இல்லையேல் மனைவிக்கும், மகளுக்கும் நான் ஒரு சுமையாகவே இருக்கவேண்டும். அவர்களும் என்னைக் கட்டித் திரிந்தே வாழ்க்கையைக் கழிக்கவேண்டும்" என்கிறார் ரஞ்சித். தமது கைப்படச்செய்த 3 அடி சுற்றளவில் நான்கு சக்கரங்களைக்கொண்ட ஒரு தட்டியில் இருந்தவாறு இத்தட்டியிலேயே இவரது இளம் மனைவி கமலாவதி இவரை வைத்து சிறு வடமொன்றில் இழுத்துச் செல்கிறார் கூடவே நான்கு வயது மகள் செல்வி பின்னால் போய்க்கொண்டிருக்கிறாள்.

இப்படியே இவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் இரவில் மனித உருவிலுள்ள நாய்கள் தம்மைச் சுற்றிவருகின்றன என்கிறார் ரஞ்சித். கால்களை இழந்தநிலையில் இவற்றை சமாளிப்பது கடினமாக இருக்கிறது என்று கலங்குகிறார் இவர்.

ஒரு முச்சக்கர வண்டியையும் ஏதாவது ஒரு தொழில்வாய்ப்பையும் பெற்று எஞ்சிய காலத்தை இத்தமிழ் மண்ணிலேயே வாழ்ந்து கழித்துவிட வேண்டும் என்ற பேரவா இவரை வாட்டுகிறது.

தமக்கு உறுதியான உதவிகளை வழங்கும்படி யாழ்ப்பாணம் செஞ்சிலுவைச் சங்கம் மூலமாக ரஞ்சித் இருகரம் நீட்டி நிற்கிறார்.

சந்திப்பு: அனந்த்

# சித்தவைத்தியப் பிரிவு கைதடி ஆயுர்வேதக் கல்லூரியில் இயங்கும்!

## ஆண்டுப்பரீட்சை மார்ச் 20ல் ஆரம்பம்

(ஏ. வி. மாணிக்கம்)

கொழும்பு பல்கலைக்கழக உள்நாட்டு மருத்துவக்கல்வி நிறுவனத்தின் சித்தவைத்தியப் பிரிவைச் சேர்ந்த தமிழ் மாணவர்களுக்கான வருடாந்தப்பரீட்சை மார்ச்மாதம் 20-ம் திகதி கைதடி ஆயுர்வேதக் கல்லூரி மண்டபத்தில் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

கொழும்பு பல்கலைக்கழகத்தில் மேற்படி சித்தவைத்திய பட்டப்படிப்பு மேற்கொண்டிருந்த 36 தமிழ் மாணவர்கள் கடந்த ஆண்டு நிகழ்ந்த ஆடிக் கலவரத்தின்போது பாதிக்கப்பட்டுத் தத்தமது சொந்த இடங்களுக்குத் திரும்பியிருந்தனர்.

கடந்த நவம்பர்-டிசம்பர் மாதங்களில் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் உள்நாட்டு மருத்துவக் கல்வி நிறுவனத்தில் ஆயுர்வேதம் சித்த வைத்தியம், யுனானி வைத்தியம் ஆகிய மருத்துவக் கல்விக்கான பரீட்சைகள் நடைபெற்றபோதிலும் இப்பரீட்சையில் சித்தவைத்தியப் பட்டப்படிப்பை மேற்கொண்டிருந்த தமிழ் மாணவர்கள் தோற்றவில்லை.

சித்தவைத்தியப்பட்டப் படிப்பில் முதலாம் வருடத் தமிழ் மாணவர்கள் 11 பேரும் 4-ம் வருடத் தமிழ் மாணவர்கள் 10 பேரும், 5-ம் வருடத் தமிழ் மாணவர்கள் 15 பேரும் கைதடி ஆயுர்வேதக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கும் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர்.

யாழ். அரசாங்க அதிபரும் யாழ். மாவட்டச் செயலாளருமான திரு. தேவநேசன் நேசையா, யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் ஆகியோர் எடுத்துக்கொண்ட முயற்சியின் பேரில் கைதடி ஆயுர்வேதக் கல்லூரியில் இப்பரீட்சை நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைதடி ஆயுர்வேத ஆஸ்பத்திரிக்கு அருகாமையில் இக்கல்லூரி அமைந்திருப்பதும், யாழ் பல்கலைக்கழக மருத்துவபீடம் வகுப்புகள் இங்கு முன்னர் நடைபெற்றதும் குறிப்பிடத்தக்கது

இக்கல்லூரியில் இருந்த அகதிகளில் ஒரு பகுதி குறைந்திருப்பதால், கல்லூரியின் பிரதான மண்டபமும், 'அங்காதிபாத' அறையும் மாணவர்கள் பயன்படுத்தக்கூடியதாக இருக்கும் என்று பதிவாளர் கூறினார்.

யாழ். பல்கலைக்கழக உயர் மட்ட உத்தியோகத்தர் குழுவும், கொழும்பு பல்கலைக்கழக சித்தவைத்தியத்துறைத் தலைவர் வைத்திய கலாநிதி சுப்பிரமணியம் பவானியும், கைதடி ஆயுர்வேதக் கல்லூரிக்குச்சென்று பார்வையிட்டு, பரீட்சைகள் நடைபெறுவதற்கான ஒழுங்குகளைச் செய்துள்ளனர்.

### விரிவுரைகள் நடைபெற ஏற்பாடு

கொள்கை அளவில் உயர் கல்வி அமைச்சர் ஒரு முடிவு எடுக்கும்வரை சித்தமருத்துவ வகுப்புகளுக்கான விரிவுரைகள் இக்கல்லூரியில் நடைபெறவுள்ளனவென்றும், இவ்வகுப்புகளுக்கான நேர அட்டவணை மேற்படி பரீட்சை முடிவடைந்ததும் தயாரிக்கப்படுமென்றும் பதிவாளர் திரு. சிவராசா நம்பிக்கை தெரிவித்தார்.

நவீனமுறையில் சித்தவைத்தியத்தை மேல் நாட்டு வைத்தியத்துறையுடன் இணைந்து பகுதிநேர விரிவுரைகள் நடத்துவதென யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடம் தீர்மானித்துள்ளதென்றும் இந்த மருத்துவபீட பீடாதிபதி வைத்திய கலாநிதி எஸ். சிவஞானசுந்தரம் 'சுற்றாடல் சமூகவைத்தியத்துறை சம்பந்தமாக விரிவுரை நிகழ்த்த இணக்கம் தெரிவித்துள்ளார் என்றும் குறிப்பிட்ட பதிவாளர்; ஏற்கனவே மருத்துவபீடம் இங்கு இயங்கிவந்ததால் எதுவித கஷ்டமும் இருக்காதென்றும் சொன்னார்.

"சித்தவைத்திய மூலிகைத் தோட்டம் ஒன்று இக்கல்லூரி வளவில் அமைப்பதற்கு குறிப்பிட்ட தொகைப்பணம் திட்டமிடல் பகுதியால் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்துறையை விரிவடையச்செய்வதற்கு இந்தியாவில் சித்தவைத்தியத் துறையில் நிபுணத்துவம் வாய்ந்த விரிவுரையாளர்களை இங்கு அழைப்பதிலும் இங்குள்ள விரிவுரையாளர்களை இந்தியாவுக்கு மேலும் பயிற்சி பெற அனுப்புவதிலும் நான் ஈடுபட்டுள்ளேன் என்றும் அவர் தெரிவித்தார்.

சித்தமருத்துவ பட்டப்படிப்பு இங்கு நடைபெறுவதனால் இதுசம்பந்தப்பட்ட தனியார் கல்லூரி மாணவர்களும் இத்துறையைச் சேர்ந்த வைத்தியர்களும் பெரும்பயனடைவார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

(மா)

315 பெரும் பரிசுகளை வெல்லுங்கள்

METALIX 'பெரும் பரிசு'ப் போட்டியில் சேருங்கள்.

1-ம் பரிசு - 12" சோனி கறுப்பு/வெள்ளை டெலிவிஷன் செட
2-ம் பரிசு - 3 வேக சொப்பர் பைசிக்கிள்
3-ம் பரிசு - மெற்றலிக்ஸ் பெரிய அளவு உருக்கு அலுமாரி

ஆறுதற் பரிசுகள் -
12 மெற்றலிக்ஸ் 6 பைந்து மின்சாரக் கேத்தல்கள்.
150 மெற்றலிக்ஸ் சுப்பர் கணிதப் பெட்டிகள்.
150 மெற்றலிக்ஸ் தராதரக் கணிதப் பெட்டிகள்.

விசேஷ வியாபாரிகள் பரிசு
முதற் பரிசு பெறுபவரின் கூப்பனில் பெயர் குறிப்பிடப்படும் வியாபாரிக்கு ஒரு மெற்றலிக்ஸ் நிர்வாக மேசை.

உங்கள் 'மெற்றலிக்ஸ்' சுப்பர் அல்லது தராதரக் கணிதப் பெட்டியை வாங்கி, இந்த விளம்பரத்தில் காணும் கூப்பனை நிரப்பி 'மெற்றலிக்ஸ்' 'பெரும் பரிசு'ப் போட்டிக்குத் தபாலில் அனுப்புங்கள்.
மெற்றலிக்ஸ் எஞ்சினியரிங் கம்பனி லிமிட்டெட்,
த.பெ.எண். 1, கோட்டே.

- முதலில் இழுக்கும் விண்ணப்பத்துக்கு 1-ம் பரிசும், இதே வரிசைக் கிரமப்படி அடுத்தடுத்த பரிசுகளும் வழங்கப்படும்.
- விண்ணப்பங்களுக்கு முடிவு தேதி 30, ஏப்ரல் 1984 - பரிசிழுப்புத் தேதி 16.05.84.
- பரிசு பெறுவோர் பட்டியலும் பரிசு விழாத் தேதியும் நடைபெறும் இடமும் பத்திரிகைகளில் வெளிவரும். பரிசு பெறுவோருக்குத் தகவல் தபாலில் அனுப்பப்படும்.
- மெற்றலிக்ஸ் எஞ்சினியரிங் கம்பனி லிமிட்டெட், செனித் அட்வட்டைசிங் ஆகிய நிறுவன ஊழியர்களும் அவர்களின் நேரடிக் குடும்பத்தினரும் இப்போட்டியில் கலந்து கொள்ளக்கூடாது.

கூப்பன்:
பெயர்: ..........
விலாசம்: ..........
..........
..........
பற்றுச்சீட்டு இலக்கம் ..........
வாங்கிய தேதி: ..........
வியாபாரியின் பெயர்: ..........
..........
..........





விலை: மெற்றலிக்ஸ் தராதரம்
ரூ. 45/- சில்லறை விலை.

விலை: மெற்றலிக்ஸ் சுப்பர்
ரூ. 49/- சில்லறை விலை.

மெற்றலிக்ஸ் எஞ்சினியரிங் கம்பனி லிமிட்டெட்,
41/18, எப்பிற்றமுல்ல வீதி, கோட்டே.

METALIX ... தரத்தில் முதலிடம்.

LIC - S/380

ZENITH

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி: 10-30, 2-30
6-00 சிவாஜி-சந்திரபாபு
சபாஷ் மீனா

வெஸ்லி மானிப்பாய்
தினசரி 3-30, 6-00
சிவாஜி - விஜயா
சத்திய சுந்தரம்

இன்னும் சில தினங்கள் மட்டும்
ரீகல் (யாழ். நகர்)
தினசரி: 10-30, 2-30, 6-15, லோகன்.
திருமதி பாக்யராஜ்...
பயணங்கள் முடிவதில்லை
- வண்ணம் -
From 1-3-84
SHAMMI KAPOOR
RAJSHREE...... IN
JANWAR
- Color -
Music - Shankar Jaikishan

சாந்தி (யாழ். நகர்)
10-30, 2-30, 4-45
7-00, 9-30
Roger Moore in
FOR YOUR EYES ONLY
Scope — Colour
(Strictly for Adults)
இப்பொழுது மிகுந்த பரபரப்பூட்டி கொட்டகை நிறைந்த காட்சிகளாக காண்பிக்கப்படுகிறது.
இதற்குநிகரான ஜேம்ஸ் பொண்ட் துப்பறியும் சித்திரம் நீங்கள் பார்த்திருக்க முடியாது. தவிர்க்க முடியாத காரணங்களினால் 29-02-84 வரை மட்டுமே காண்பிக்கப்பட விருப்பதால் ஏமாற்றத்தைத் தவிர்த்துக் கொள்வதற்கு அறிவிக்கின்றோம்.

லிடோ (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30.
ஜெய்சங்கர்—பானுமதி
எடுப்பார் கைபிள்ளை

வெலிங்டன் [யாழ். நகர்]
தினசரி 10-30, 2-30, 6-30
சிவகுமார் - சில்க்சுமிதா
வண்டிச் சக்கரம்
[புதிய பிரதி]

கொட்டகை நிறைந்த காட்சிகள்
ராஜா (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00
9-00



கமல்— ஸ்ரீதேவி— திரை
மீண்டும் கோகிலா
(கவிமன் கலர்)

உதைபந்தாட்டப் போட்டிக்கு

# யாழ். தெரிவுக் கோஷ்டி ஜூனில் சிங்கப்பூர் செல்லும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உதைபந்தாட்டத் தெரிவுக் கோஷ்டி இவ்வருடம் ஜூன் மாதம் சிங்கப்பூர் செல்ல இருக்கிறது

இதற்கான ஏற்பாட்டினை, யாழ்ப்பாண உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் டாக்டர் ஜே பி ஸி. பிலிப் தலைமையிலான நிர்வாகசபை மேற்கொண்டு வருகின்றது சிங்கப்பூர் செல்வதற்கு முன், யாழ்ப்பாண உதைபந்தாட்ட லீக், யாழ்ப்பாண மாவட்ட விளையாட்டு கழகங்களிடையே, பல உதைபந்தாட்டப் போட்டிகளை நடத்த இருக்கிறது.

''இப்போட்டிகளில் சிறப்பாக விளையாடும் வீரர்களைத் தெரிந்தெடுத்து பயிற்சி அளித்தே சிங்கப்பூர் கொண்டு செல்லப்படுமென யாழ்ப்பாண உதைபந்தாட்ட லீக்கின் உதைபந்தாட்டப் பயிற்சியாளர் திரு எஸ். மாட்டீன் கூறினர்.

யாழ்ப்பாண உதைபந்தாட்ட லீக், விளையாட்டுக் கழகங்களிடையே, இம்முறை 7-பேர் பங்குபற்றும் போட்டி, 18 வயதுக்குட்டவர்களுக்கிடையிலான போட்டி, 'தலைவர்' வெற்றிக் கிண்ணத்துக்கான ''நொக்கவுட்'' போட்டி, 25-வயதுக்குட்பட்டவர்களுக்கிடையிலான போட்டி, வருடாந்த லீக் சுற்றுப்போட்டி, வருடாந்த நொக்கவுட் போட்டி, ஆகிய போட்டிகளை நடாத்தவிருக்கிறது முதல் போட்டி அடுத்த மாத முற்பகுதியில் ஆரம்பமாகும். இப்போட்டிகளுக்கான சகல ஏற்பாடுகளையும் யாழ் லீக்கின் போட்டிக்குழுக் காரியதரிசி திரு. ஏ. தேவராசா மேற்கொண்டு வருகிறார்

இப்போட்டிகள் அனைத்தும் யாழ் தெரிவுக் கோஷ்டி யூன் மாதம் சிங்கப்பூர் செல்வதற்கு முன் நடாத்தி முடிக்கப்படும் என யாழ். உதைபந்தாட்ட லீக்கின் காரியதரிசி திரு எஸ் தார்ஸீஸியஸ், எமது நிருபரிடம் கூறினர். (வி)

## மீண்டும் தெரிவு

(புலோலி)

புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க ஐக்கியநாணய சங்கத் தலைவராக மீண்டும் பொது முகாமையாளர் திரு. சோ. அருணகிரியே தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

உபதலைவராக திரு நா. கணேசலிங்கராசாவும், செயலாளராக திரு கோ. நடராசாவும், உப செயலாளராக திரு மு ஆனந்தவெற்றிவேலும், பொருளாளராக செல்வி எஸ் சிவரத்தினமும் தெரிவு செய்யப்பட்டனர். திரு கே. பாலகிருஷ்ணன், திரு கே. சின்னத்தம்பி, திரு எஸ். தங்கவேல், திரு எம். இராசையா ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாக தெரிவாகினர்.

ராணி (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
ஆனந்தன் — சச்சு
வீரத்திருமகன்
24-2-84 முதல்
டிக் டிக் டிக்

மனோகரா (யாழ். நகர்)
10-30, 2-30, 6-00
சிவாஜி—ஸ்ரீதேவி
சுந்தரராஜன்
கவரிமான்
(புத்தம் புதிய பிரதி)

ஹரன் (யாழ். நகர்)
இரண்டாவது குதூகல வாரம்!
திருலோகசந்தரின்
சிவாஜி, ஸ்ரீப்பிரியா,
வசந்தத்தில் ஓர்நாள்
(ஈஸ்மன் கலர்)

வின்ஸர் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி — பத்மினி
ஜெய்சங்கர் - வாணிஸ்ரீ
குலமா குணமா
24—26 வரை
ஜெமினி— சரோஜாதேவி
மணமா பாசமா

## இன்றைய பலன்

மாசி மாதம் 11-ம் திகதி

(23—2—84)

வியாழக்கிழமை

மேடம்: தூரத்துப் பயணம் துயரத்தைத் தரலாம், வருமானத்தில் வீழ்ச்சி தென்படும், வைத்தியச் செலவுகளுக்கு இடமுண்டு, இன்று சிறு வருத்தம் வரினும் பெருமுறையில் கவனிக்கவும்.

இடபம்: குடும்பம் இன்று கலைக்கோயிலாகமாறும், இசைத்துறையில் இன்று ஆர்வம் ஏற்படும், பிள்ளைகளினால் பெருமைக்கு இடமுண்டு.

மிதுனம்: நண்பர்களே உங்கள் முன்னேற்றத்திற்குத் தடங்கலாக அமைவார்கள். மொட்டைக் கடிதமொன்று அதிக பரபரப்பை ஏற்படுத்தும், தொழில்முறையில் நஷ்டம் ஏற்படலாம்

கடகம்: இறைவழிபாடு மேலிடும், இதயத்தில் அமைதி ஏற்படும். முதியவர் ஒருவர் தக்க சமயத்தில் உங்களுக்கு உதவுவார்.

சிங்கம்: உற்சாகமாக நாளை ஆரம்பிப்பீர்கள். தொழிற்றுறையில் முன்னேற்றமானசம்பவங்கள் இடம்பெறும், வெளியிடத்திலிருந்து வரவேற்கத்தக்க செய்தியும் கிடைக்கும்.

கன்னி: மேற்றவும் பொன்பொருள் சேரும், மேலிடத்து ஆதரவு தப்பாமல் கிட்டும், தித்திக்கும் செய்தியுடன் தேனும் வாழ்வும் உண்டு.

துலாம்: தானிய நஷ்டத்திற்கு இடமுண்டு, வியாபாரிகள் புதிய முதலீடுகளைத் தவிர்த்துக் கொள்ளவும்.

விருச்சிகம்: ஏமாற்றத்திற்கு இடமாகி அவதிப் படுவீர்கள், பூமிப் பிணக்குகளினால் கவலை தோன்றும், தொழில் புரியும் இடத்தில் சூழ்ச்சிகள் உருவாகும், சிறு பிணிக்கும் இடமுண்டு, இழைவி நன்று

தனுசு: மனம் நிறைந்த சம்பவங்கள் இடம் பெறும், பெரியவர்களின் ஆசி தாராளமாக கிடைக்கும், கைவிட்ட பணம் மீண்டும் கிடைப்பதற்கு இடமுண்டு, வீட்டிலும் மகிழ்ச்சியுண்டு.

மகரம்: குடும்பத்தில் சிறு பூசல் தலை தூக்கும், பெரியவர் ஒருவருடன் அபிப்பிராய பேதம் தோன்றக்கூடும், ஆத்திர உணர்ச்சியால் மோதல் ஏற்படும், அமைதியாக இருக்கவும்.

கும்பம்: கனிவான நினைவுகளில் இன்று ஆனந்தமாக மிதந்து செல்வீர்கள், கல்வித்துறையில் வித்துவத் தன்மை தென்படும், வாகனம் செலுத்துபவர்கள் மக்கள் ஆதரவைப் பெறுவர், சுப தினம்.

மீனம்: செய்தொழிலால் சிறப்புக் கிடைக்கும், வழக்கு விவகாரம் வெற்றி தரும், நீண்ட நாள் பிரச்சனைகளை இன்று நல்ல முடிவாக்குவீர்கள், வெளியிடத்திலிருந்து மகிழ்ச்சியைத் தேடித்தரும் செய்தி இன்று கிடைக்கும்.

சோதிடக் கலாநிதி

திருமலை

வேலுப்பிள்ளை ரவீந்திரன்

## யாழ். மாவட்ட சுகாதார சேவை அலுவலகபிரதம கணக்காளர் மறைவு கண்ணீர் அஞ்சலி!

[பண்டத்தரிப்பு]

யாழ். மாவட்ட சுகாதார சேவை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் பிரதம கணக்காளராக கடமையாற்றும் திரு. க. தம்பிஐயா நேற்று முன்தினம் அலுவலகத்திலிருந்து தெல்லிப்பழையிலுள்ள தமது வீட்டிற்கு சென்று கொண்டிருந்த வேளையில் திடீரென ஏற்பட்ட மாரடைப்பினால் மரணமானார். இவரது மரணச்சடங்குகள் நேற்று தெல்லிப்பழையில் நடைபெற்றபோது யாழ். சுகாதார சேவை கண்காணிப்பாளர் அலுவலக உத்தியோகத்தர்கள் ஊழியர்கள், மற்றும் யாழ். மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளில் கடமையாற்றும் டாக்டர்கள் ஊழியர்கள் பெருமளவில் கலந்து கொண்டு தங்கள் கண்ணீர் அஞ்சலியை தெரிவித்தனர்.

அரசாங்க பொது தாதிய உத்தியோகத்தர்கள் சங்கம் புதுத்தோட்டம் இளைஞர் முன்னேற்றக்கழகம் என்பன அஞ்சலி செலுத்தித் துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டன.

## வெள்ள நிவாரண மதிப்பீடு

(துணுக்காய்)

துணுக்காய் பகுதியில் வெள்ள நிவாரண மதிப்பீடு நடைபெற்றது.

கடந்த மூன்று மாதங்களாக தொடர்ந்து பெய்து வரும் கடும் மழை காரணமாக வவுனிக்குளம், பாண்டியன்குளம், விஞயபுரம், யோகபுரம், துணுக்காய் போன்ற பகுதிகளில் நெல், உளுந்து, கால் நடைகள் போன்றவற்றின் அழிவு பற்றியும் மதிப்பிடப்பட்டது

இந்த அழிவுகளை கிராம சேவகர்கள்பார்வையிட்டனர். தற்போது மாசி மாதமுற்பகுதியில் பெய்த கடும்மழையினால் சகல சிறு பயிர்களும், கால் நடைகளும் அழிந்துள்ளன. இவற்றை நேரடியாக பார்வையிட்டு மதிப்பீடு செய்யுமாறு அந்தந்தப்பகுதி விவசாய உத்தியோகத்தரை சமதல சேவை நிலையம் பணித்துள்ளது. வவுனிக்குளப்பகுதி சமநல சேவை அதிகாரிகள் வெள்ள நிவாரண மதிப்பீடுகளை செய்து வருகிறார்கள்.

புதிய...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டிருப்பதும் இதுவே முதற் தடவை.

திரு சௌந்திரத்தின கவிஞரும் இசைவல்லுனரும் இலக்கிய விமர்சகருமாவார். [கு]

## கலைமாண்பு நிறைந்த கல்வியதிகாரி

கல்விச் செழிப்பால் நாடு வளம் பெற வேண்டும் என்றதற்காகத் தம் வாழ்நாளை அர்ப்பணித்த பெரியார்களுள் அமரர் சு. சிவசுப்பிரமணியம் B Se அவர்களும் ஒருவர் ஆவர். பாட்டனார் அருணாசலம் உடையாரால் அளவெட்டியிற் தோற்றுவிக்கப் பெற்ற பாடசாலையை முன்னேற்ற மடைய வளர்த்துத் தாமே அதிபராய் இருந்து கல்வித் தொண்டு புரிந்த பெரியார் இவர். ஆங்கிலக் கல்வியை அளவெட்டியில் உள்ளாரும் அயற் கிராமத்தவரும் நன்கு தெளிந்து கொள்ள அமைத்த கல்லூரி அருணோதயக் கல்லூரி அஃது அமரர் சிவசுப்பிரமணியம் அவர்களின் முதுசொத்து.

கட்டுப்பாடு, கருணை, நேரந்தவறாமை பாடங்களிற்திறமை ஒழுக்கம் நிறைகுணம் கலைத்திறமை ஆகியவற்றின் உரைகல்லாக வளர்ந்து தம் கல்லூரியின் அவை எல்லாம் நிலை ஒழுங்குற வளர்த்தவர் இவரென்று கூறலாம். ஆங்கில மொழியில் விஞ்ஞானமாணி [B Sc] பட்டதாரியாகியும் கல்வியில் பட்டப்பின்படிப்பு Dip in ed) தகுதிநிலை பெற்றவராயும் விளங்கிக் கல்வித்துறை எல்லாவற்றையும் மிகத் தெளிவாகப் பெற்றுக் கொண்ட இவர் அளவெட்டிக் கிராமத்தில் ஒரு நட்சத்திரமாகப் பிரகாசித்தார் அவர் காலத்தில் வாழ்ந்த அதிபர்களுள் வயதிற்குறைந்தவராகச் சேவையில் மூத்தவராய் யாழ்ப்பாண நாடு பெருமையுறத் தமது கல்விப்பணியை நடாத்தியவர் நடத்துவித்தவர்.

இவ்வாறு சிறப்புற்ற அதிபர் அளவெட்டி அருணோதயக் கல்லூரி சுழிபுரம் விக்ரோறியாகல்லூரி, கோப்பாய் கிறிஸ்தவகல்லூரி, தெல்லிப்பழைமகாஜனகல்லூரி ஆகியவற்றில் அதிபர் பதவி வகித்துப் புகழ் கொண்டு அதன்மேல் யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்தின் கல்வி அதிகாரியாக உயர்ச்சிபெற வாழ்ந்தவர் அதனோடு முல்லைத்தீவு திணைக்களத்திற்கு மாற்றம் பெற்று அங்குள்ள ஆசிரியர் மட்டுமன்றிப் பொதுமக்களும் கண்டு போற்றும் வகையில் மிகப் பிரபலம் உடையவராகத் திகழ்ந்தார்.

இவ்வாறு திறமைமிக்ககல்வியதிகாரியாக கல்வித்துறையும் கலைத்துறையும் நாட்டிலோங்க நற்பணிபுரிந்த இப்பெரியார் தமக்குற்ற நோயின் காரணமாக எதிர்பாராத வகையில் இவ்வுலகை விட்டு நீங்கியமை கேட்டார் யாவரையும் துயருற வைத்த ஈழநாட்டின் இனிய கல்விப் பெரியராக வாழ்ந்த இவர் மறைவு என்றென்று நினைவு கூரப்பாலது.

''நெருநல் உளனொருவ னின்றில்லை யென்னும் பெருமையுடைத்திவ் வுலகு.

—ச. விநாயகரத்தினம்

## வெள்ள நிவாரணம்

(துணுக்காய்)

வவுனிக்குளம் பகுதியில் உள்ள மாந்தை கிழக்கு பாண்டியன்குளம் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள விஞயபுரம், ஒட்டன்குளம், பாலியாறு போன்ற இடங்களுக்கு வெள்ள நிவாரணமாக அரிசி, மா, சீனி போன்ற பொருட்கள் வெள்ள அகதிகளுக்கு வழங்கப்படுகின்றது.

உதவி அரசாங்க அதிபர் திரு. கே சண்முகநாதன் எடுத்த முயற்சியின் பலனாக விஞயபுரம் கிராம சேவகர் திரு. சோ சிவராஜன் அழிவு ஏற்பட்ட இடங்களை பார்வையிட்டு இந்த உதவிகளை வழங்கி வருகின்றார். (வெ)

யாழ். ஆஸ்பத்திரி வளவிலிருந்து

# பூட்டப்பட்ட சைக்கிளைத் தூக்கியவர் பொலிஸாரிடம் மாட்டிக் கொண்டார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரி வளவில் விடப்பட்டிருந்த பூட்டப்பட்ட சைக்கிளை மெதுவாகத் தூக்கிவிடுக்குவந்தவர் 'ஜீப்'பில் வந்த பொலிஸாரிடம் சிக்கிக் கொண்டார்!

யாழ்ப்பாணம் நீதவான் எஸ். நாகராசா முன்னிலையில் சந்தேகநபரான சுவிபுரத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை அருள்ராஜா ஆஜர் செய்யப்பட்டார்.

கடந்த ஞாயிறுகாலை 11மணியளவில் ஆஸ்பத்திரியிலிருந்து பூட்டப்பட்ட சைக்கிளை எடுத்துவந்ததை அவர் ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து நீதவான் அவரின் கைவிரல் அடையாளத்தை பதிவுசெய்து றிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டு தீர்ப்பு வழங்குவதை அடுத்த மாதம் 6ம் தேதிக்கு ஒத்திவைத்தார்.

சைக்கிள் உரிமையாளரான கொக்குவிலைச் சேர்ந்த பாலசிங்கம் விஜயகுமார், நீதிமன்ற பொறுப்பிலிருந்த சைக்கிளை பெற்றுச் சென்றார். (க)

இடம்பெயர்ந்த மாணவர்களில்

## கலைப்பீட மாணவர்கள் 24-ல் கூடுவார்கள்

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்த பேராதனை பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்கள் யாழ் பல்கலைக்கழகத்தில் அனுமதிபெறுவது பற்றியும், பாடசாலை இணைப்புகளைப்பற்றிய தரவுகளைப் பெறுவது குறித்தும், இம் மாதம் 24-ம் திகதி காலை கூடி ஆலோசனை நடத்தவுள்ளனர்.

யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறவிருக்கும் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் இடம்பெயர்ந்த பல்கலைக்கழக தமிழ் மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் கடந்த 15-ம் திகதி உயர் கல்வி அமைச்சில் கூட்டப்பட்ட மகாநாட்டில் கலந்துகொண்டு எடுக்கப்பட்ட முடிவுகள் பற்றியும் கலந்தாலோசிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக வெளி மாவட்டங்களிலுள்ள பல்கலைக்கழக தமிழ் மாணவர்கள் இடம்பெயர்ந்த பல்கலைக்கழக தமிழ் மாணவர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (மா)

மார்ச் 13ம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வதாக அமைச்சர் லலித் அத்துலத்முதலி தெரிவித்தார்.

எதிர்வரும் மார்ச் மாதத்திலேயே சர்வகட்சி மகாநாட்டில் இறுதித் தீர்வுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென்றும் அமைச்சர் அத்துலத்முதலி தெரிவித்தார்.

சர்வகட்சிமகாநாட்டுக் குழுவினர் தெரிவித்த ஆலோசனைகள் எதிர்வரும் மார்ச்மாதம் நடைபெறவுள்ள மகாநாட்டில் பரிசீலனை செய்யப்படவிருப்பதால், மகாநாடு புதிய கட்டத்தை அடையுமென்றும் அமைச்சர் அத்துலத்முதலி கூறினார்.

சர்வகட்சி மகாநாடு எதிர்வரும் மார்ச் மாதம் 13ம், 15ம், 20ம், 21ம், 22ம், 23ம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

நேற்றைய மகாநாட்டில் தமிழ்க் காங்கிரஸின் சார்பில் இரண்டு பிரதிநிதிகளே பங்குபற்றினார்கள். தமிழ்க் காங்கிரஸைச் சேர்ந்த திரு சி. மகேந்திரராஜா நேற்றைய மகாநாட்டில் கலந்துகொள்ளவில்லை.

மக்கள் வங்கி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சுருதியே நகைகள் கொழும்புக்கு எடுத்துச்செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த செவ்வாய்க்கிழமை வெளியான 'ஈழநாடு' இதழில், மக்கள் வங்கி அடகு நகைகள் பாதுகாப்பு நலன் கருதி பத்திரமான இடமொன்றுக்கு மாற்றப்படுமா என்ற செய்தி வெளிவந்திருந்தது தெரிந்ததே.

பென்ஸ் கார்களை-

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பப்பட்ட 'பென்ஸ்கார்'களில் அதிகமானவை விற்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு- ஜப்பான் விமானசேவை

கொழும்பு- ஜப்பான் விமான சேவையை நடத்துவதற்கும் அமைச்சரவை நேற்று அங்கீகாரம் வழங்கியது. (வெ)

## கலைஞர்களுக்கு நிதி உதவி

(கொழும்பு)

கலைஞர்களுக்கு நிதி உதவி அளிக்கும் சட்ட மூலத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (வெ)

## இப்படியும் நடக்கிறது

கார் நடைபாதை உலகைச் சுற்றிவரும் கல்கத்தாவைச் சேர்ந்த சாதனைவீரன் திரு. அருண் ருத்ரா கடந்த மாதம் இலங்கைக்கு வந்தபோது யாழ்ப்பாணத்துக்கும் நடைவிஜயம் மேற்கொண்டது நீங்கள் தெரிந்ததே.

இலங்கையிலிருந்து தாய்லாந்து செல்லும் நோக்குடன் இந்தியா புறப்பட்ட அவர், 15-2-84 திகதியிட்டு மதுரையிலிருந்து எனக்கு ஒரு கடிதம் அனுப்பியுள்ளார். நேற்றுக் கிடைத்த அக் கடிதத்தின் சில பகுதிகள்:

"இராமேஸ்வரத்திலிருந்து கப்பல் மார்க்கமாக தலைமன்னார் வந்து கொழும்பு சென்று பின்னர் மாத்தறை, மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா... கடைசியாக யாழ்ப்பாணம்... என்று வந்தேன்...

"இலங்கையின் எந்தப் பகுதியிலும் கிடைக்காத பண்பான வரவேற்பு யாழ்ப்பாணத்தில் கிடைத்ததை நான் மறக்கமாட்டேன். நான் கொழும்பு சென்றிருந்தபோது முதலில் இந்தியத் தூதரகத்துக்குப் போயிருந்தேன். அங்கு எனக்குக் கிடைத்த 'வரவேற்பு' நான் இந்தியன் என்று கூறிக்கொள்ளவே வெட்கப்படும் அளவுக்கு இருந்தது! "நான் ஒரு இந்தியன். நான் இப்போது நின்றுகொண்டிருப்பதும் இந்தியத் தூதரகத்தில்தான். ஒரு இந்தியனுடன் சாதாரணமாகக் கதைக்கவே இந்தியராகிய நீங்கள் வெட்கப்படுகின்றீர்கள் போலும்..." என்று நான் உணர்ச்சிவசப்படும் அளவுக்கு தூதரகத்தின் சில அதிகாரிகள் அங்கு நடந்துகொண்டனர். நான் வாய்விட்டுக் கேட்டும் சிறிதளவு நிதிஉதவிகூட எனக்கு இவர்கள் செய்யவில்லை. ஆனால் இலங்கையின் எந்தப் பகுதியிலும் கிடைக்காத அன்பான உபசரிப்பும் வரவேற்பும் யாழ்ப்பாணத்தில். சமூகப்பணியாற்றும் சில கழகங்களினால் கிடைத்ததுடன் எதிர்பாராத நிதிஉதவியும் கிடைத்தது. இந்த விபரம் நான் எழுதும் புத்தகத்தில் இடம்பெறுவது மட்டுமல்ல; எனது வாழ்க்கையிலும் மறக்கமுடியாதது. யாழ்ப்பாண மக்கள் எனது நெஞ்சத்தில் இந்துக் கோவில்களின் கட்டிடங்கள் மாதிரி உயர்ந்து நிற்கின்றார்கள்..."

"ஊடுருவி"

ஹெலிகாப்டர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர்கள் பிரயாணம் செய்வதற்காக வெளிநாட்டிலிருந்து இரண்டு ஹெலிகாப்டர்கள் இறக்குமதி செய்யப்பட்டதாகவும், ஆனால் அவற்றில் எந்தவிதமான ஆயுதங்களும் பொருத்தப்படவில்லையென்றும் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்தார்.

ஹெலிகாப்டர்களில் துப்பாக்கிகளும், பாதுகாப்புக்கலசமும் பொருத்தப்பட்டதாக வெளிவந்த செய்தி தவறானதென்றும் அமைச்சர் தெரிவித்தார்.

துப்பாக்கிகள் வெளிநாட்டிலிருந்து வந்ததும் அவை ஹெலிகாப்டர்களில் பொருத்தப்படுமென்றும் அவர் கூறினார். (வெ)

## மரண அறிவித்தல்

### திரு. அருளானந்தம் இராசையா

இளைப்பாறிய ஆசிரியர் திரு. இராசையா அவர்கள் காலமானார். இவர் இளைப்பாறிய ஆசிரியை சின்னத்தங்கத்தின் அன்புக் கணவரும், திருமதி அருள்ராசபத்மநாயகி (ஆசிரியை வீமன்காமம் - அருள் ரீச்சர்), இராசநாயகி (இங்கிலாந்து), தேவகடாட்சம் (பெருந்தெருக்கள் திணைக்களம்), புவனநாயகி (கிளிநொச்சி), ஈசுவரதேவன் (மதபோதகர் அமெரிக்கா), தேவயானன், நவநாயகம் (இங்கிலாந்து), நவராசா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், யோகலிங்கம் (J.P. கிளிநொச்சி), செல்வநாயகம், ஜெயலட்சுமி, சுமி, மாதினி, சுலோசனா, உமா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று (23-02-84) பிற்பகல் 4-00 மணிக்கு தெல்லிப்பழை அன்னாரது இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: திருமதி செல்வநாயகம்.
974 வீமன்காமம், தெல்லிப்பழை.

## மரண அறிவித்தல்

### நீ. எஸ்தாக்கி

(ஓய்வுபெற்ற அதிபர்)

கலைக்கவி நீக்கிலாப்பிள்ளை எஸ்தாக்கி (இளைப்பாறிய அதிபர்) 22-2-1984 புதன்கிழமை காலமாகிவிட்டார். அன்னார் மோனிக்காவின் அன்புக் கணவரும், ஜெயராஜா (ஆசிரியர் மன்னார் புனித சவேரியார் கல்லூரி), மரியராணி, மரியகொறற்றி, தங்கராஜா (சவுதி), செல்வராஜா, செல்வக்கிளி, வண்ணக்கிளி, பூ ஆகியோரின் அன்புத் தந்தையும், அருளானந்தம் (மீன்பிடித் திணைக்களம், யாழ்ப்பாணம்), அல்போன்ஸ், பிலோமினா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

இறுதிச் சடங்குகள் வெள்ளிக்கிழமை (24-02-84) மாலை 4-30 மணிக்கு நடைபெறும்.

(972) நாவாந்துறை யாழ்ப்பாணம்

கிண்ணியா...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பேர் 'வீடியோ' படம் பார்த்துவிட்டுச் சென்றுகொண்டிருந்தார்கள்.

பத்துப் பேரை ஏற்றினர்

வானில் சென்ற கோஷ்டியினர், வானை மறித்து, விசாரித்துவிட்டு, "இன்னொரு ஆங்கிலப் படம் காட்டுகிறோம்! ஏறுங்கள்!" என்று கூறினார்கள். அவர்களும் ஏறிக்கொண்டார்கள்.

வானுக்குள் கொண்டுவரப்பட்ட 'காஸ் சிலிண்டர்' வெல்டிங் யந்திரம் ஆகியவற்றின் மூலமும் வங்கி துப்பாக்கிகள் மூலமும் திறக்கப்பட்டது.

சிற்றுண்டி வழங்கினர்

தம்முடன் 'படம் பார்க்க'க் கூட்டிச்சென்ற பத்துப் பேரையும் ஒரு இடத்தில் இருக்க வைத்துவிட்டு இரும்புப்பெட்டிகளில் ஒன்றை வெல்டிங் யந்திரத்தின் மூலம் உடைத்தனர். இரவு பதினொரு மணிக்கு ஆரம்பமான இந்தக் கொள்ளை நாடகம் அதிகாலை மூன்று மணிக்கே முடிவடைந்தது.

தொலைபேசி துண்டிப்பு

இந்தக்கொள்ளை ஆரம்பித்த நேரத்திலிருந்து திருகோணமலை-கிண்ணியா தொலைபேசிச் சேவை துண்டிக்கப்பட்ட நிலையிலிருந்தது.

திருகோணமலை பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. டி. எம். விஜேசேகர தலைமையிலான பொலிஸ் கோஷ்டியினர் இக்கொள்ளை சம்பந்தமான விசாரணைகளை நடாத்தி வருகின்றனர்.

## மரண அறிவித்தல்

### ஆசிரியர் கனகசபை சிவனடியான்

காரம்பன் மேற்கைச் சேர்ந்த கனகசபை சிவனடியான் இளைப்பாறிய ஆசிரியர் சிவபதம் எய்தியுள்ளார். இவர் சிறீஸ்கந்தவேள் (முல்லைத்தீவு), ஸ்ரீபதி [ஜெர்மனி] சிறீமுரு [ஜெர்மனி], சிறீதேவி [ஜெர்மனி], சிறீராதா (U.K.), சிறீசுந்தரி [ஜெர்மனி], சிறீசசி [ஜெர்மனி] ஆகியோரின் தந்தையாருமாவார்.

சிவரத்தினம், ரூப் அல்பிரட் ஆகியோரின் மாமனாருமாவார். அன்னாரது ஈமக்கிரியை 23-2-84 வியாழக்கிழமை பகல் 12 மணிக்கு ஊர்காவற்றுறை, காரம்பொன் மேற்கு மயானத்தில் தகனம் செய்யப்படும். 975

## மரண அறிவித்தல்

### திருமதி கனகம்மா இராசையா

திருமதி கனகம்மா இராசையா 22-2-84 அன்று காலமானார். இவர் காலஞ்சென்ற இராசையாவின் (இளைப்பாறிய தலைமை நில அளவையாளர்) அன்பு மனைவியும், சுந்தரலக்ஷ்மி, பூமணி (விரிவுரையாளர் - கொழும்பு வளாகம்), சொர்ணம்பாள் (ஆசிரியை - நைஜீரியா), யோகரத்தினம் (Chartered Accountant, Ceylinco Travels), துரைராசா (பொறியியலாளர் - ஹொங்கொங் அரசு), புவனேஸ்வரி, பரமேஸ்வரி (கனடா), இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், கந்தசாமி, குலசிங்கம் (Accountant - Chartered Bank), இராசேந்திரம் (வருமானவரி உத்தியோகத்தர் - நைஜீரியா), சரோஜா, சக்திதேவி (ஹொங்கொங்), இராசரத்தினம் (Draughtsman - உள்ளூராட்சித் திணைக்களம் - யாழ்ப்பாணம்), சத்தியமூர்த்தி (Chartered Accountant Canada), சிவஞானசுந்தரம் (Accountant - நியூட்) ஆகியோரின் அன்பு மாமியாருமாவார். அன்னாரின் பூதவுடல் 23-2-1984 மாலை 6 மணிக்கு 251, பருத்தித்துறைவீதி, நல்லூர், இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் யாவரும் ஏற்றுக்கொள்ளவும். 973

இலங்கை "ஈழநாடு" லிமிடெட் கம்பனியாரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1984-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under Number D 100236/81. Eelanadu- P. O. Box: 49, Telephone: 22389 — 24126.